


# ஞானச்சுடர்



சந்நிதியான் ஆச்சிரமம்

பங்குனி

2025

327ஆவது மலர்

ஓம் முருகா



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்**
**கற்றார் அனைத்திலர் பாடு.**

**பொருள் :** உயர்ந்த குலத்திற் பிறந்தாராயினும் கல்லாதார் தாழ்ந்த குலத்திற் பிறந்த கற்றவரது பெருமை இல்லாதவர்களாவர். (409)

**விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றாரோ(டு) ஏனை யவர்.**

**பொருள் :** விலங்கோடு நோக்க மக்கள் எவ்வளவு மேன்மை யுடையரோ, அத்துணை தாழ்ந்தவர் நூலைக் கற்றவரோடு நோக்கக் கல்லாதவர். (410)

---

# நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*




**திங்கட்சடையாய் எங்களையுடையாய் சிவனே ஓம்**

போற்றியென் வாழ்முத லாய பொருளே யருளே ஓம்
புண்ணியர் நண்ணும் பூரண வடிவே புகலே ஓம்
தோற்ற மறைக்குங் காரண மாகிய தொல்லோய் ஓம்
சோதிச் சுடரே தோகைக் கிடமீ துணையே ஓம்
நீற்றொடு பொலியும் நெற்றிக் கண்ணா நிமலா ஓம்
நீதி வழுவா மாதவர் தங்கள் நெறியே ஓம்
ஆற்றொடு தும்பை யம்புலி சூடிய யரனே ஓம்
அன்பு செய்யடியரை யென்றும் ஆளக் கடவாய் ஓம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 3  சுடர் - 327

2025 **பொருளடக்கம்** பங்குனி


| | | |
|---|---|---|
| இந்து மதம் பற்றிய... | திருமதி நா. சந்திரலீலா | 01 - 03 |
| பாசத் தளையறுக்கும்... | இ. ஸ்ரீதரன் | 04 - 05 |
| பகவத்கீதையின் தத்துவம் | பூ. சோதிநாதன் | 06 - 08 |
| நாம் மெய்ப்பொருள்... | திருமதி இ. புவனராணி | 09 - 11 |
| திருக்கயிலாயம் | வி. செல்வரெத்தினம் | 12 - 14 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 15 - 16 |
| திருவடிப் பெருமை | செ. பாலச்சந்திரன் | 17 - 18 |
| குண்டலினி யோகம் | கு. சிவபாலராஜா | 19 - 20 |
| தில்லைக் கூத்தனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 21 - 23 |
| பிரார்த்தனை எவ்வாறு... | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 24 - 25 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 26 - 29 |
| உடலும் உள்ளமும் | இராம ஜெயபாலன் | 30 - 33 |
| அன்பு மதம் அது... | திருமதி ந. பரமேஸ்வரி | 34 - 36 |
| திருப்புகழைக் கற்றார்... | துரை. கணேசமூர்த்தி | 37 - 41 |
| சக்தி | செ. சிவபாதம் | 42 - 45 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 46 - 51 |
| சந்நிதி முருகா போற்றி | முருகவே பரமநாதன் | - 52 |



**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் மாசி மாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியீடு செய்யப்பட்டுவரும் மாசி மாத ஞானச்சுடர் மலருக்குரிய வெளியீட்டுரையினை சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி சிந்துரா கலியுகவரதன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தம் உரையில் நீண்டகாலமாக சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மதிப்புக்குரிய மோகனதாஸ் சுவாமிகள் எந்தவித சலனமுமின்றி மிகவும் அமைதியாக அன்னதானப் பணியை மேற்கொண்டு வருகின்றார். அதுமட்டுமன்றி சைவ கலை பண்பாட்டுப் பேரவை உருவாக்கப்பட்டு அதனூடாக அன்னதானப் பணியுடன் நின்றுவிடாது ஆன்மீகம் சார்ந்த, சமூகம் சார்ந்த பல பணிகள் இன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஞானச்சுடர் முதன் முதலாக 1998ஆம் ஆண்டு தை மாதம் 250 பிரதிகளுடன் வெளிவந்தது. 28ஆவது வருடத்தில் 326ஆவது மலராக 2100 பிரதிகளுடன் தற்போது வெளியீடு செய்யப்படுவது சாதனைக்குரிய விடயமாகும். வண்ணமயமான அட்டைப் படத்துடன் நற்சிந்தனை, சுடர் தரும் தகவல், தரமான கட்டுரைகள் என பல பரிமாணங்களில் வெளிவருகின்றதுடன் ஒவ்வொரு மாதமும் எமது சைவர்களால் கொண்டாடப்படுகின்ற ஆன்மீகம் சார்ந்த நிகழ்வுகளை வெளிக்கொணருவதுடன் அதேபோல இம் முறையும் மகா சிவராத்திரியினை சார்ந்து வெளிவந்துள்ளதுடன் பகவத்கீதையின் தத்துவங்களை விபரிக்கின்ற வகையில் மனிதன் எப்படி வாழவேண்டும் என்ற சிந்தனை சிதறல்களுடன் பல்வேறுபட்ட கருத்துக்களை தாங்கி இந்த மலர் வெளிவந்துள்ளது. இம்மலரின் முதல் பக்கமும் உண்மையில் தனி அழகுதான். 2024ஆம் ஆண்டு புரட்டாதி மாத 321ஆவது மலரில் முருகனின் படத்துடன் வேல் இருந்தது. ஆனால் ஐப்பசி மாத வெளியீட்டில் முருகனின் வேல் தனி கம்பீரமாக காட்சி தந்துள்ளது. ஆகவே மலரின் அட்டைப்படம் குறியீட்டின் தத்துவத்தை விளக்குகின்றது. ஆகவே இம் மலர் எமது இளைஞர் சமுதாயத்திற்கு நிறையக் கருத்துக்களைக் கூறுகின்றது.

எந்தவித சலனமும் சளைப்புமின்றி மாதாமாதம் இம் மலருக்கான ஆக்கங்களை எழுதிவரும் கட்டுரையாளர்கள் உண்மையில் நன்றிக்குரியவர்கள். அதைவிட பல்வேறு சவால்களுக்கு மத்தியில் சிரமங்களை பொருட்படுத்தாது இம் மலரினை வெளியீடு செய்யும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினருக்கும் சுவாமிகளுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து தனது வெளியீட்டுரையினை இனிதே நிறைவு செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மதிப்பீட்டுரை:-**

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியீடு செய்யப்பட்டுவரும் மாசி மாத ஞானச்சுடர் மலரின் மதிப்பீட்டுரையினை இளைப்பாறிய ஆசிரியர் திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள் ஆற்றினார்கள்.

அவர் தம் உரையில் ஆலய வழிபாட்டினை மேற்கொண்டு பேரின்ப பெருவாழ்வினை பெறுவோம் என்ற தொனிபட இம் மலரில் கட்டுரை அமைந்துள்ளது என்றும் ஆலயத்தில் தொண்டு செய்து முத்தி பெற்றோர் என்ன என்ன செய்தார்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றார். அத்துடன் கிருபானந்தவாரியார் அவர்களின் வரலாறு அழகுபடக் கூறப்பட்டுள்ளது. அந்த வகையில் முருகனை நினைத்து நீங்கள் வழிபட வேண்டும். முருகன் சகல சௌபாக்கியங்களையும் தருவான் எனக் குறிப்பிட்டார்.

அன்னதானக் கந்தன் எனப் போற்றப்படும் இப் பதியிலே அன்னதானத்துக்கு மேலாக சமூகம் சார்ந்த பணிகள் பெருமளவில் நடைபெறுவது வியக்கத்தக்க விடயம் ஆகும். இவ்வகையான செயற்பாடுகளை இம் மலரில் நாம் பார்வையிடக் கூடியதாக அமைந்துள்ளதுடன் இம் மலருக்கான ஆக்கங்களை எழுதிவரும் எழுத்தாளர்கள் என்றும் போற்றப்படவேண்டியவர்கள். காலத்திற்கேற்ற மாதிரி சைவத் தொண்மைகளை எடுத்தியம்பும் வகையிலும் எழுதுவது சிறப்பானதாகும் எனவும் குறிப்பிட்டு தனது மதிப்பீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

தொடர்ந்து 2024ஆண்டுக்கான வாசகர் போட்டியில் வெற்றியீட்டிய வாசகர்களுக்கு பரிசில்களும், சிறப்புப்பிரதிகளும் வழங்கப்பட்டதுடன் அன்றைய நிகழ்வுகள் இனிதே நிறைவடைந்தன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

உலகிலே நடைமுறையில் உள்ள சமயங்களில் மூத்த சமயமாக சைவம் விளங்குகின்றது. தொன்மை நிறைந்த சாத்திரங்களும், தோத்திரங்களும் பக்தி இலக்கியங்களும் நிறைய உண்டு. சமய ஞானிகளும் காலத்துக்குக் காலம் தோன்றுகின்றார்கள். ஆனாலும் பல சமயங்களின் நெருக்கீடுகளாலும், எதிர்ப்புக்களாலும் சமய மாற்றம் என்ற பூதாகாரம் எம்மைப் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்குகின்றன. அந்த வகையில் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் ஊடுருவல்களினை ஒவ்வொரு சமயிகளும் சீர்தூக்கிப் பார்ப்பதில்லை.

சைவம் கூறுபோடப்படுவதும், குறிக்கோள்களை இழந்து புற சமயத்தின் பாதையில் சேர்வதும் தம் சமயத்தை தாங்காமல் உதாசீனமாக வாழ்வதும் சைவத்தை எங்கே கொண்டுபோய்விடும் என்பதை எள்ளத்தனையும் உளத்தில் கொள்வதாய் தெரியவில்லை.

பூசை, புனஸ்காரம், சடங்கு, கிரியை என்பன விழா போன்ற ஆடம்பரமன்று. சமய வழியில் தம்மை இட்டுச்சென்று அடுத்த பரம்பரையையும் நெறிப்படுத்துவதே நம் கடமை. ஒழுக்கங்கள், கோட்பாடுகள், ஆசார அனுட்டானங்கள் என்ற நடைமுறைகளினை தத்துவார்த்தமாக கொண்டதே எமது சமயம். அந்தவகையில் செவ்விய நெறியில் தம்மை வழிப்படுத்தி சீரிய சமய வாழ்க்கையை மேற்கொண்டு செம்மையான தவ வாழ்வு காண்பதே சமய இலக்கு ஆகும்.

சைவம் எதிர்நோக்கும் சவால்கள் பலவாகத் தென்படுகின்றன. இவற்றை சீர்தூக்கிப் பார்த்து சைவ கட்டுமானங்களைப் பேணுவது ஒவ்வொருவரதும் கடமை ஆகும்.

நாட்டில் இடம்பெற்ற அசம்பாவித காரணங்களால் ஏற்பட்ட நெருக்கடிகளால் வீடிழந்து, சொத்திழந்து, சுகமிழந்து, உயிரிழந்து, உறவிழந்து நிர்க்கதியானபோது மக்களின் நலன்பேண சைவம் தவறிவிட்டது. ஆனால் இருப்பிடம் உடை, உணவு, மருந்து போன்ற பன்முகப்பட்ட உதவிகளை கிறிஸ்தவம் முன்னின்று செய்தது. இதனால் திருப்திகண்ட மக்கள் மதம் மாறினர் என்றால் தற்போது சைவம் தம் மக்களின் அவலங்களைப் போக்காமல் குளிர்காய்வதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கின்றது. இதனால் குறுகிய காலத்தில் மக்களின் நம்பிக்கையையும், ஆதரவையும் இழந்து வருகின்றது. இந்நிலை மாறவேண்டும். அவ்வாறாயின் எமது சைவ அமைப்புக்கள் தொடர் சமுதாயப் பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**இ. சங்கரலிங்கம்**
(அம்மன் பல்பொருள் வாணிபம், ஊரெழு கிழக்கு)

**இராமசாமி திருச்செல்வம்**
(தலைவர், பர்வபத்தினி அம்பாள் தேவஸ்தானம்)

**அ. வரதராசா**
(வரியப்புலம் வீதி, சுண்ணாகம்)

**வே. நடராசா**
(தும்பளை மேற்கு)

**சி. கிருஷ்ணபிள்ளை J.P.**
(ஆவரங்கால்)

**பொதுமுகாமையாளர்**
(வலி. கிழக்கு வடபகுதி ப.நோ.கூ. சங்கம், அச்சுவேலி)

**பொதுமுகாமையாளர்**
(பனை, தென்னை வள அபிவிருத்தி கூ. சங்கம், அச்சுவேலி)

**சி. குமாரலிங்கம்**
(இளைப்பாறிய வங்கியாளர், யாழ்ப்பாணம்)

**செ.க. செல்வநாயகம்**
(செல்வா ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)

**திருமதி சு. செல்வக்குமார்**
(மாநகரசபை, யாழ்ப்பாணம்)

**வ. ஜீவாகரன்**
(வரணி)

**சு. சோமாஸ்கந்தமூர்த்தி**
(சித்தங்கேணி)

**யோ. சிவஉமாகரன்**
(உயர் பட்டப்படிப்புப்பீடம், யாழ் பல்கலைக்கழகம்)

**திருமதி தயாநிதி பாலசுந்தரம்**
(தெல்லிப்பழை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ந. கணேஸ்வரமூர்த்தி**
(கரவெட்டி)
**ச. தங்கராசா J.P.**
(இளை. அதிபர், நீர்வேலி)
**க. மணியன்**
(புத்தூர்)
**வ. துரைராசா**
(ஒஸ்காவீதி, உரும்பராய் தெற்கு)
**சி. தவலிங்கம்**
(இளை. இலங்கை வங்கி முகாமையாளர், பருத்தித்துறை)
**மு. குமரதாசன்**
(வல்வெட்டித்துறை)
**K. கேதீஸ்வரநாதன்**
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
**சு. மகேஸ்வரன்**
(மாரியம்மன் மோட்டோர்ஸ், கோப்பாய்)
**தம்பிப்பிள்ளை குணரட்ணம்**
(சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி)
**S. திருவாஞ்சீஸ்வரன்**
(V.S.K. மானிப்பாய்)
**K. கோபாலகிருஷ்ணன்**
(சாவகச்சேரி)
**அ. கோணேஸ்கரன்**
(தில்லையம்பதி, கோண்டாவில்)
**இ. சந்திரசேகரன்**
(மாசியப்புலம் வீதி, ஏழாலை)
**ஜெ. ஜெயப்பிரதாப்**
(சாவகச்சேரி)
**சி. அழகேசன்**
(வட்டுவினி அம்மன் கோவிலடி, இணுவில்)
**க. தர்மநாயகம்**
(மஞ்சத்தடி, இணுவில்)
**பொ. ஞானப்பிரகாசம்**
(கரணவாய் தெற்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரிமையாளர்**
(கண்ணாடி களஞ்சியம், நெல்லியடி)
**இ. வீரசிங்கக்குருக்கள்**
(கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு)
**அதிபர்**
(உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி)
**திருமதி சி. தருமலிங்கம்**
(இமையாணன், உடுப்பிட்டி)
**கனகலிங்கம் சந்திரவாசன்**
(நீர்வேலி)
**சறோஜினிதேவி மாணிக்கராசா**
(வறாத்துப்பளை, பருத்தித்துறை)
**சி. உமாமகேசன்**
(கொடிகாமம்)
**மார்க்கண்டு முத்துப்பிள்ளை**
(அத்தியடி, யாழ்ப்பாணம்)
**க. விக்னேஸ்வரராஜா**
(புலோலி)
**லலிதா சண்முகலிங்கம்**
(திருமகள் வீதி, அரியாலை)
**சி. விவேகானந்தம்**
(பருத்தித்துறை)
**சி. நாகரூபன்**
(கரணவாய்)
**K. பிரதீபன்**
(யாழ்ப்பாணம்)
**ஐ. காளிங்கநடனம்**
(கொக்குவில்)
**கு. ரங்கநாதன்**
(இணுவில்)
**க. ஜெயபாலகணேசன்**
(சிறுப்பிட்டி தெற்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Dr. அ. செந்தில்குமரன்**
(பல் வைத்திய நிபுணர், ஆதார வைத்தியசாலை, ஊறணி)

**இ. பாஸ்கரன்**
(நல்லூர், யாழ்ப்பாணம்)

**த. சிவானந்தமூர்த்தி**
(புத்தூர்)

**சி. பத்மகுமார்**
(இணுவில் தெற்கு)

**அதிபர்**
(இமையாணன் அ.த.க. பாடசாலை)

**பா. சுதாகரன்**
(கற்பகப் பிள்ளையார் ஸ்ரோர்ஸ், உரும்பராய்)

**வ. கெங்கநாதன்**
(நீர்வேலி)

**P. நடராசா**
(கல்லடி ஒழுங்கை, சாவகச்சேரி)

**சி. சிவகுமார்**
(ஆவரங்கால்)

**S. முரளிதரன்**
(அச்சுவேலி)

**V. கருணாகரன்**
(சங்கானை)

**ச. சிவலிங்கம்**
(மானிப்பாய்)

**சண்முகம் தனலட்சுமி**
(கரணவாய்)

**வ. இரத்தினசிங்கம்**
(கம்பர்மலை)

**க. வைத்தியநாதன்**
(ஏழாலை)

**சி. கணபதிப்பிள்ளை**
(கரவெட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமதம் பற்றிய கண்ணோட்டம்

– *திருமதி சந்திரலீலா நாகராஜா* அவர்கள் –

சிந்துவெளியில் ஆரம்பித்த இந்துமதம் பரதகண்டம் முழுவதும் பரவியதுடன் வெளி நாடுகளிலும் அதன் தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆரம்பத்தில் சைவம், வைணவம், சாக்தம் என்ற பிரிவுகளில் சாக்தம் காலப்போக்கில் சைவம், வைணவத்துடன் கலந்தே வளர்ச்சி பெற்றது. வட இந்தியாவில் வைணவம் பெரும்பான்மை மக்களின் மதமாக வளர்ச்சி பெற்றது. இதன் வளர்ச்சிக்குப் பல்வேறு விஷ்ணு பக்தர்கள் தோற்றம்பெற்று இக் கலாசார மறுமலர்ச்சிக்காக உழைத்தனர். குறிப்பாக மீராபாய், சக்குபாய், கோராக்கும்பர், கபீர்தாசர், துளசிதாசர், நாம தேவர், ஜெயதேவர், இராமானந்தர் போன்றவர்களைக் குறிப்பிடலாம். மக்களுக்காக பல்வேறு பக்திநெறிகளை எடுத்துக்காட்டினர். மக்களை சாதி வேறுபாடு பார்க்காமல் இறைவனின் பிள்ளைகளாகவே பார்த்தனர். மக்களை மட்டுமல்லாது விலங்குகளையும் தம்முயிர்போல் நேசித்துக் காப்பாற்றினர். இவர்கள் வாழ்விலிருந்து பக்திநெறி, கற்புநெறி, சகிப்புத்தன்மை, தன்னடக்கம், அன்புநெறி, வள்ளல் தன்மை ஆகியவையையும் அறியமுடியும். இறைவனை நம்பினோர் ஆரம்ப காலத்தில் அடையும் சோதனையும் முடிவில் இறைவனின் கருணையால் ஆட்கொள்ளப்பட்டதையும் கண்டுகொள்ளலாம்.

கபீர்தாசர் 1440 - 1518 வரை வாழ்ந்து வடநாட்டுப் பக்திநெறியில் குறிப்பிடத்தக்கவர். வள்ளலாரைப்போல சமரச சன்மார்க்க நெறியினை வலியுறுத்தினார். சமூகத்தில் காணும் குறைபாடுகளை நீக்கி சீர்திருத்தவாதியாகத் திகழ்ந்தார். கபீர்தாசர் இராமதாசரைக் குருவாக ஏற்றுக்கொண்டவர் ஏழை மக்களின்மீது இரக்கம் கொண்டு ஏழ்மையைத் தீர்த்தவர். இந்து, இஸ்லாம் மக்களிடையே ஒருமைப்பாட்டைப் பேணிக் காத்து கபீர் இயக்கமொன்றினைத் தோற்றுவித்தவர். பிற்காலத்தில் இராம கிருஸ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், தயானந்த சரஸ்வதி போன்றோர்களால் புதிய உத்வேகம் பெற்றது. எவ்வாறு வடநாட்டில் வைணவம் தனது செல்வாக்கை மேம்படுத்தியதோ அவ்வாறே தென் நாட்டிலும் குறிப்பாக தமிழ் நாட்டிலும் பாரிய வளர்ச்சியை கண்டது. பன்னிரெண்டு ஆழ்வார்களும் சிறப்பாக இப்பணியை மேற்கொண்டனர். பல்லவர் காலத்தில் பக்திநெறி சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் போன்றவர்களால் வளர்ச்சி கண்டது. குறிப்பாக அப்பர் சரியைத்தொண்டு செய்து சைவசமயத்தை வளப்படுத்தினார். உழவாரப் படையாளி என்று போற்றப்படும் அப்பர் தமிழ் நாட்டிலுள்ள சிவாலயங்களுக்குச் சென்று சுற்றி வளர்ந்துள்ள புல், பூண்டுகளைக் களைந்து மக்களின் வழிபாட்டிடமாக மிளிரச் செய்தார். நாவுக்கரசர் இருந்திருக்காவிட்டால் பிற்காலத்தில் சிவாலய வழிபாடு பெருமளவிற்கு இல்லாமலும் போயிருக்கலாம். அந்த வகையில் சிவாலயங் களை வழிபட வகுத்தவர். அதேமாதிரி சம்பந்தரும், அப்பரும் கோவில்களை தரிசித்து தேவாரங் களை பாடினார்கள். இத் தேவாரங்கள் மக்களிடையே வரவேற்பு பெற்றதுடன் தமிழ்மொழியும், இசையும் வளம்பெற வழிவகுத்தது. சம்பந்தர், அப்பர் மட்டுமன்றி பிற்காலத்தில் 09ஆம்,

*எப்போதும் கடமைகளைச் செய்யும் ஆயத்த நிலையில் இருப்பவர்கள் எதையும் சாதிப்பார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10ஆம் நூற்றாண்டில் தோன்றிய சுந்தரர், மணிவாசகர் ஆகியோரும் தேவாரம், திருவாசகம், திருக்கோவையாரும் பாடி தமிழ்மொழி வளர்ச்சிக்கும், இசைக்கலை வளர்ச்சிக்கும் பெரும் தொண்டாற்றினர். இவர்களால் சைவர்களின் முக்கிய அடையாளச் சின்னமாகிய திருநீறு, உருத்திராக்கம் பூணும் கலாசாரமும் மேன்மையுற்றது. திருநீற்றுக் கலாசாரம் பிற்காலத்தில் ஆறுமுகநாவலரால் யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் வளர்ச்சியுற்றது. விபூதிக் கலாசாரத்தில் தற்கால பக்தர்கள் எந்த நிலையில் உள்ளனர் என்பதைப் பார்க்குமிடத்தில் பெருமளவிற்குப் பின்பற்றப்படுவதில்லை. விபூதி பூசுவதுகூட வெட்கமென எண்ணுகின்றனர். இவ்விடயம் இந்து சமயத்தில் ஒன்றாகிய சைவம் தளர்நிலையை நோக்கிப் போவதற்கு வழிவகுக்கும். முக்கியமாக திருவிழா காலங்களில் விரதமிருப்பவர்கள் விபூதியைத் திரிபுண்டரமாக தரித்தல் அதை எந்தெந்த இடங்களில் தரித்தல் வேண்டுமென்பதை நாவலரின் சைவ வினாவிடை மூலமாக அறிந்து பின்பற்றலாம். ஆனால் தற்கால இளைஞர், யுவதிகள் பெரும்பான்மையோர் பின்பற்றுவதில்லை. நாங்கள் எந்த மதத்திற்கும் எதிராக இருக்கக்கூடாது. ஆனால் தான் பின்பற்றும் மதக்கலாசாரத்தை கைவிடக்கூடாது. மத கலாசாரத்தைப் பின்பற்றுவதன்மூலம் எமது பண்பாடுகளை பாதுகாத்துக்கொள்ள முனைகின்றோம் என்பதை தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

இன்று போலிச் சாமியார்கள் தோற்றம்பெற்று மக்களை ஏமாற்றி சுகபோகத்தில் வாழ்கிறார்கள். எனவே போலித் துறவிகளை இனங்கண்டு அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படிச் செய்வதன்மூலம் இந்துசமயம் சிறப்பாக வளர்வதற்கு வழிவகுக்கும். தற்காலத்தில் இந்துமதப் பிரிவுகளாகிய சைவம், வைணவம் எல்லா மக்களாலும் ஏற்கப்பட்டு ஒற்றுமையாய் வளர்ந்து வருகிறது. பரதகண்டம் மட்டுமல்லாது இலங்கை, தென்கிழக்கு ஆசிய நாடுகள், ஐரோப்பிய நாடுகளிலும் இவற்றைக் காணலாம். பல ஐரோப்பியர்களும் இந்து மதத்தை அறிவதில் ஆர்வமுடையவர்களாகக் காணப்படுகின்றனர். அத்துடன் இந்துமத துறவிகளால் எழுதப்பட்ட பல்வேறு தத்துவக் கருத்துக்களை அறிய ஆர்வம்கொண்டது மட்டுமல்லாது அவற்றை வளர்ப்பதற்கு தமது நாடுகளில் பல்வேறு ஆச்சிரமங்களை அமைத் துள்ளார்கள். இவ்வாறு செய்வதன்மூலம் இந்துமதம் வளர்ச்சியடையுமென்பதில் சந்தேகமும் இல்லை. இன்று இராம கிருஸ்ண பரமஹம்சருக்காகவும், சுவாமி விவேகானந்தருக்காகவும் பல மடங்களைக் கட்டியுள்ளனர். காலத்திற்குக் காலம் அதற்கான விழாக்களையும் எடுத்து வருகின்றனர். இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள இந்து மக்கள் வெளிநாடுகளில் பல்வேறு இந்துக் கோயில்களைக் கட்டி கலாசார வளர்ச்சிக்கு உழைக்கிறார்கள்.

அமெரிக்கா, அவுஸ்திரேலியா, லண்டன், கனடா போன்ற இடங்களில் முருகன், விஷ்ணு, பிள்ளையார், சிவனுக்கு ஆலயங்கள் அமைத்து திருவிழாக்கள் நடத்துவதை கண்கூடாகப் பார்க்கமுடிகிறது. எமது மதத்தில் தவறுகள், தப்புகள் இருந்தால் இந்து மக்களாகிய நாம்தாம் தீர்க்கவேண்டும். நாங்கள் அந்தணர்களை மதித்து அவர்களுக்கான வசதிகளைச் செய்துகொடுத்தல் கட்டாயமாகிறது. பிற மதங்களில் பல வசதிகள் மதகுரு மாருக்கு செய்துகொடுப்பதுபோல எமது சிவாச்சாரியார்களுக்கும் செய்தல் வேண்டும்.

*கோப்புகள் நினைவுக்குரிய சாதனமே தவிர, பணிகளை நிறைவேற்றக்கூடிய சாதனமல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மசாலைகள், அறப்பாடசாலைகள் அமைக்க வேண்டும். இவற்றால் ஏழை மக்களின் பசிப்பிணி, கல்வி, ஒழுக்கம் பேணப்படும். ஆடம்பரங்களுக்கு இடம்தராது பக்தர்களின் பசிப்பிணி, சமூகப்பிணி தீர்க்கும் நிலையமாக ஆலயங்கள் மிளிரவேண்டும்.

தற்பொழுது உலகளாவிய ரீதியில் இந்துமதம் வளர்ச்சிகண்டுள்ளது என்பதை மறக்கவோ, மறுக்கவோ முடியாது. ஆனால் இந்து மதத்தைச் சேர்ந்தோர் பலர் மதம் மாறுவது தவிர்க்கப்பட வேண்டிய விடயமாகும். எம் மதமும் சம்மதமென்று இந்துமதம் கூறிய போதிலும் எமது மத கலாசார விழுமியங்களை பாதுகாக்க வேண்டும். ஏனைய மதங்களைப் போல எமது மதம் கட்டுப்பாடற்ற மதம் என்பது உண்மைதான். அதற்காக பிற மதத்திற்கு மாறுவது கவலையளிப்பதாகும். போலித் துறவிகளின் ஏமாற்றுவித்தையை இல்லாதொழிக்க பாடுபடவேண்டும். இந்து மதத்தில் பல்வேறு அன்னதான மண்டபங்களை அமைத்து பசிப்பிணி போக்குவது வரவேற்கக்கூடிய விடயமாகும். தமிழ்நாட்டில் வடலூரில் வள்ளலார் நினைவாக அன்னதானசாலைமூலம் நிகழ்கிறது. இப்பணி வள்ளலார் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட திருப்பணியாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை நல்லூரில் கந்தன் ஆலயத்திற்கு அண்மையிலுள்ள 63 நாயன்மார் குருபூசை மடமும், நல்லை ஆதீனமும் அன்னதானப்பணியை சிறப்பாகச் செய்து வருகின்றது. மேற்கு வீதியிலுள்ள துர்க்கா மணிமண்டபத்திலும் இது நடைபெறுகிறது. குறிப்பாக நித்திய அன்னதானப் பணியை செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு அண்மையிலுள்ள சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டு வருகின்றது. அதுமட்டுமல்லாது சமூகப்பணிகள், நலிவுற்றோருக்கு கொடுப்பனவு, ஏழை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், துவிச்சக்கர வண்டிகள், வைத்தியசேவை போன்ற பல்வேறுபட்ட சேவைகளை மோகனதாஸ் சுவாமிகளின் மேற்பார்வையில் நடைபெற்று வருகின்றன. ஒரு காலத்தில் அன்னதானக் கந்தன் எனப் பெயர்பெற்ற சந்நிதி போர்க்கால சூழலால் பல்வேறு மடங்கள் அழிவுற்ற நிலையில் சந்நிதியான் ஆச்சிரமம் இன்றும் இயங்கி வருகின்றது. நயினாதீவு நாகபூஷணி ஆலயத்திற்கு அருகிலுள்ள அன்னபூரணி மடமும் செயலாற்றுகிறது. நாமும் எமது இந்து மதத்தைக் காப்பாற்றுவோமாக.

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏப்ரில் | 04 | பங் | 21 | வெள்ளி | நல்லைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் முருகேசு சுவாமிகள் |
| ஏப்ரில் | 07 | பங் | 24 | திங்கள் | யோகர்சுவாமி |
| ஏப்ரில் | 23 | சித் | 10 | புதன் | திருநாவுக்கரசர் |
| ஏப்ரில் | 28 | சித் | 15 | திங்கள் | சிறுத்தொண்டர் |
| ஏப்ரில் | 30 | சித் | 17 | புதன் | மங்கையர்க்கரசியார் |
| மே | 31 | வை | 17 | சனி | நமிநந்தியடிகள் சேக்கிழார் |

*வளர்ச்சி பெறாத மக்களிடம் நன்றியை, கடப்பாட்டை எதிர்பார்ப்பது தவறு; கிடைக்காது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசத் தளையறுக்கும் மாசிமக விரதம்

— திரு இராசையா ஸ்ரீதரன் அவர்கள் —

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமானுக் குரிய விரதங்களுள் சிறப்பம்சம் நிறைந்த விரதம் மாசி மாதத்தில் வருகின்ற மக விரதமாகும். இந்த விரதம் புனிதம் தரும் ஒரு புண்ணிய விரதமாகும்.

சைவ சமயிகள் ஒவ்வொருவரும் அனுட்டித்துப் பயன்பெறும் இந்த விரதம் மாசி மாதத்திலே கூடும் மக நட்சத்திரத்தன்று வருவதன் காரணமாக "மாசிமக விரதம்" என்று அழைக்கப்படுகின்றது. இந்த நல்ல நாளில் காலை எழுந்து புனித நீராடிச் சந்தியாவந்தனம் முடித்து சிவ சிந்தனையுடன் விநாயகப் பெருமானை வணங்கிக்கொள்ள வேண்டும்.

பாசத் தளையறுக்கவல்ல இந்த மாசி மகம் பாச வினையையும் போக்கவல்லது. முன்னொரு சமயம் மழைக்குரிய தெய்வமான வருண பகவானை பிரம்மஹத்தி தோஷம் பீடித்துக்கொண்டதாம். அது அவரைச் சமுத்திரத்தினுள்ளே கட்டி வைத்திருந்தது.

இதையறிந்த தேவர்கள் சிவபெருமானிடம் முறையிடவே அவர் எழுந்தருளிவந்து வருண பகவானை விடுவிக்க கட்டை அறுத்தருளினார். அவ்வாறு வருணனின் கட்டறுத்த நாள்தான் இந்த மாசிமகம். பிரம்மஹத்தி தோஷம் நீங்கி சிவனருள் பெற்ற வருணன், "சிவனே! எனக்கு விடுதலை கிடைத்த இந்த மாசி மகத்திலே கடல், நதி, ஆறு முதலியவற்றில் நீராடித் தங்களை வணங்குகின்ற அடியவர்களுக்கு நித்திய பேரானந்த முத்தியை வழங்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டாராம். சிவபெருமானும் "அப்படியே ஆகட்டும்" என்று அருள்புரிந்தாராம். அது முதலாக இந்த மாசிமக விரதத்தை நோற்பவர்கள் நற்கதி அடைந்த தாக வரலாறு கூறுகின்றது. பிரகஸ்பதி எனப்படும் வியாழ பகவான் மகம் நட்சத்திரத்துடன்கூடி கும்பராசிக்குப் போகும்போது மகாமகம் என்ற புண்ணிய காலம் ஏற்படும். இது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் நிகழுகின்றது. இதுவே சைவ அடியவர்களால் "மாமாங்கம்" என்று அழைக்கப்படுகிறது.

இந்த மாசிமகம் வரும் நாளில் ஈர ஆடையுடன் சிவபெருமானை வணங்குபவர்களுக்கு அவர்களின் பிரார்த்தனைகள் யாவும் ஈடேறும் என்று சொல்லப்படுகிறது. எனவே இவ்விரதம் சைவர்களால் விரும்பி அனுட்டிக்கப்படுகிறது. இந்தியாவிலே கும்பகோணத்தில் இந்த நாள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. "கும்பமேளா" என்று கூறி நிகழும் இப் பெருவிழாவிலே அடியார்கள் அனைவரும் புனித புண்ணிய நீராடி தங்கள் வாழ்வில் நலம்பல கிடைக்கவேண்டும் என்று பிரார்த்தித்து நிற்பர். அத்துடன் இந்த மாசி மகத்திலே சிவனுடைய அடியவர்களுக்குப் பசிதீர அன்னதானம் வழங்குவதும் புண்ணிய பேறாகும். எல்லாவற்றுக்கும் மேலாக இந்த மாசிமக விரதமிருந்தால் புத்திரபாக்கியம் உண்டாகும் என்றும் சொல்லப்படுகிறது.

**உதிரும் பூவாக இல்லாமல் அதைச் சுமக்கும் செடியாக இருப்பவனே நண்பன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணமாகாத கன்னிப் பெண்களுக்கு விவாகம் நடக்கும் என்ற நம்பிக்கையும் உண்டு. ஆகவே இந்த மாசிமக விரதத்தை முறையாக அனுட்டித்து அவனருளாலே அவன்தாள் வணங்கி சதுர்விக புருஷார்த்தங்களைப் பெற்றுய்வோமாக.

---

ஒரு நாள் அரசன் தன் நாட்டு நிலைமையைப்பற்றி அறிந்துகொள்ள மாறுவேடத்தில் நகர்வலம் சென்றான். அப்போது நகரத்தில் இரண்டு பிச்சைக்காரர்கள் பிச்சை எடுப்பதைக் கண்டான். ஒரு பிச்சைக்காரன் கடவுள் பெயரைச் சொல்லி பிச்சை கேட்டான். இன்னொருவன் அரசனின் பெயரைச் சொல்லி பிச்சை கேட்டான். அரசன் தனது சேவகர்களிடம் அந்த இரண்டு பிச்சைக்காரர்களையும் அவைக்கு அழைத்துவரும்படி ஆணையிட்டான். அவர்கள் அந்த இரண்டு பிச்சைக்காரர்களையும் அவைக்கு அழைத்து வந்தார்கள். அரசன் அவர்களிடம் இருவருமே பிச்சை எடுப்பதைப் பார்த்தேன். ஒருவர் கடவுள் பெயரைச் சொல்லியும், இன்னொருவர் அரசன் பெயரைச் சொல்லியும் பிச்சை எடுத்ததற்குக் காரணம் என்ன? என்று கேட்டான் அரசன். அதற்கு கடவுள் நம்பிக்கை கொண்ட பிச்சைக்காரன் "அரசே இந்த உலகம் முழுவதையும் காப்பவன் இறைவன்தான். இறைவனின் அருளால் மட்டுமே ஒருவன் செல்வந்தனாக மாறமுடியும். அதனால்த்தான் இறைவன் பெயரைச் சொல்லி பிச்சை கேட்கிறேன்" என்றான். மற்றொரு பிச்சைக்காரன் "அரசே இறைவன் கண்ணுக்குத் தெரியாதவன். ஆனால் கண்ணுக்குத் தெரிந்த விசயம் அரசன் மட்டுமே. அரசனால் மட்டுமே ஒருவன் செல்வம் பெறமுடியும். அதனால்த்தான் அரசன் பெயரைச் சொல்லி பிச்சை கேட்கிறேன்" என்றான். அரசன் இருவரையும் அனுப்பிவிட்டு தன் அமைச்சரிடம் இதுபற்றி ஆலோசித்தான். அமைச்சர் அரசனிடம் "முதல் பிச்சைக்காரன் சொன்னதுதான் சரி. இறைவன் அருள் இருந்தால்த்தான் அந்த உதவியைப் பெறமுடியும்" என்றார் அமைச்சர். அரசனும் "இறைவனின் அருளா? அல்லது அரசனின் அருளா?" என்று சோதித்துப் பார்க்கத் தீர்மானித்தான்.

சில நாட்களில் அந்நாட்டிலுள்ள கோயில் திருவிழா நடைபெற்றது. அன்று அரசனும் குடிமக்களுக்கு சில பரிசுகள் அளிக்கப்போவதாக அறிவித்தான். பரிசினைப்பெற குடிமக்கள் அனைவரும் வந்தனர். அவர்களுடன் அந்த இரண்டு பிச்சைக்காரர்களும் வந்தனர். அரசன் ஒவ்வொருவருக்கும் புதிய துணி ஒன்றையும் கூடவே பறங்கிக்காய் ஒன்றையும் பரிசளித்தான். அரசன் பெயரில் பிச்சை எடுப்பவனுக்கு மட்டும் பறங்கிக்காயினுள் தங்க, வைர நகைகளை வைத்து பரிசளித்தான். கடவுள் பெயரைச் சொல்லி பிச்சை எடுத்தவனுக்கு எல்லோரையும் போலவே துணியும் பறங்கிக்காய் மட்டும் பரிசளித்தான். சில நாட்கள் கழிந்தன. மீண்டும் அந்தப் பிச்சைக்காரன் அரசன் பெயரைச் சொல்லி பிச்சை எடுத்துக்கொண்டு இருந்தான். இதைப் பார்த்த அரசன் "தான் பறங்கிக்காயின் உள்ளே தங்க, வைர நகைகள் வைத்து பரிசளித்தும் இவன் பிச்சை எடுக்க வேண்டிய காரணம் என்ன?" என்று அரசனுக்குத் தோன்றியது. உடனே அரசன் அந்தப் பிச்சைக்காரனிடம் "நான் அன்று உனக்குப் பரிசுகள் அளித்தேனே, அதற்குப் பிறகும் நீ பிச்சை எடுக்கவேண்டிய அவசியம் என்ன?" என்று கேட்டான். அந்தப் பிச்சைக்காரனும் "அரசே நீங்கள் அன்று ஒரு பறங்கிக்காய் பரிசளித்தீர்கள். அதை நான் ஐந்து வெள்ளிக்காசுகளுக்கு ஒருவனுக்கு விற்றுவிட்டேன். அந்த ஐந்து வெள்ளிக்காசுகளை வைத்து எத்தனை நாட்கள் நான் உண்ணமுடியும்? அதனால் மீண்டும் பிச்சை எடுக்க வந்துவிட்டேன்" என்றான். அதைக்கேட்ட அரசன் கோபமுற்று, "அடேய் மூடனே நான் உனக்கு பரிசளித்த பறங்கிக் காயினுள் தங்க, வைர நகைகள் வைத்திருந்தேனே. நீ அதனை வெட்டிப் பார்த்திருந்தால் அறிந்திருப்பாயே!" என்று அவனை திட்டிவிட்டு நகர்ந்தான். சற்று தூரத்தில் ஒரு செல்வந்தனைக் கண்டான். அவன் இறைவன் பேரைச் சொல்லி பிச்சை எடுத்தவன் என்பதையும் அரசன் அறிந்துகொண்டான். அரசன் அவனிடம் சென்று "ஐயா நீங்கள் முன்பு பிச்சை எடுத்துக்கொண்டு இருந்தீர்கள் அல்லவா? இப்பொழுது எப்படி செல்வந்தனாகிவிட்டீர்கள்?" என்று கேட்டான். அதற்கு அவனும் "அரசே! நான் என் தந்தை இறந்த தினத்தில் சிலருக்கு இறைவன் பெயரைச் சொல்லி அன்னதானம் செய்வேன். அன்று ஒருவனிடம் ஐந்து வெள்ளிக்காசு கொடுத்து ஒரு பறங்கிக்காய் வாங்கினேன் அதனை சமைப்பதற் காக வெட்டியபோது அதனுள் தங்க, வைர நகைகள் இருப்பதைக் கண்டேன். இறைவன் அருளால் இன்று நான் செல்வந்தன் ஆகிவிட்டேன்" என்று கூறினான்.

***உழைப்பிற்குத் தகுந்த ஊதியம் என்பதே மனிதனை வளர்க்கும் நெறி.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் தத்துவம்

## அத்தியாயம் - 15

(தொடர்ச்சி...

## குறிக்கோளும் அதனை அடையும் வழியும்

– *திரு பூ. சோதிநாதன்* அவர்கள் –

### 11) ஒருவகை அமைப்பு

சரியான அறிவின் பல பகுதிகளை உடைய இந்த வகைப்பாட்டில் ஒருவகை ஒழுங்கு அல்லது அமைப்புப் பின்பற்றப்பட்டு வருவதாகத் தோன்றுகிறது. ஆரம்பத்தில் அடக்கம், போலித்தன்மை இல்லாமை முதலான நல்லொழுக்கங்கள் குறிப்பிடப்பெறுகின்றன. ஒரு குருவின் கீழிருந்து வேலை செய்து படிக்கின்ற ஒரு சீடன் அல்லது பிரம்மச்சாரி அல்லது மாணவன் கொண்டிருக்க வேண்டிய நற்பண்புகளே இவை. இந்த ஒழுக்கப் பண்புகளோடு தனது ஆசிரியரான குருவுக்குச் சேவை செய்யக்கூடிய பண்பு உடையவனாக ஒரு சீடன் இருக்கவேண்டும். மேலும் அவன் மனம், மொழி, செய்கைகளிலும் தூய்மையானவனாகவும் இருக்கவேண்டும். அதேவேளை பற்றின்மை மேலும் ஓர் அத்தியாவசியமான அம்சமாகச் சுட்டிக்காட்டப்பெறுகிறது. ஒவ்வொன்றினதும் புறச் சிக்கல்களில் இருந்து படிப்படியாக விடுபடுவதையும், எல்லாவற்றையும் உள்ளவாறு காண்பதில் அந்தப் பற்றின்மை உச்சமாக இருப்பதையும், எல்லாப் பொருள்களினதும் அழியும் தன்மையையும், கடவுள் பக்தியையும், எல்லாத் தோற்றப்பாடுகளுக்கும் பின்னால் ஓர் என்றுமுள்ள உண்மை இருப்பதையும் அறிவதே அறிவு என்று கருதப்பெறுகிறது. பல்வேறு ஆச்சிரமங்கள் அல்லது படிநிலைகள் பற்றியும் நுண்ணிய ஒரு குறிப்பும் அங்கே தரப்பெற்றுள்ளது. அங்குள்ள சுலோகங்களில் உட்கிடையாகக் குறிக்கப்பெறும் அந்த ஆச்சிரமங்கள் பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பனவாம். ஒவ்வொரு பண்பும், ஒழுக்கமும், நடத்தையும், செயலும், பார்வையும் கடவுளின் மேலான தன்மையை ஏற்றுக்கொள்ளும் போக்கு உள்ளதாய் இருக்கும். கடவுளின் பூரணத்துவம், நிறைவு என்பன பற்றியவையும் அறிவு எனக் கருதப்பெறும். அவற்றைத் தவிர்ந்த ஏனைய எல்லாம் அறியாமை ஆகும். கடவுளை நோக்கிச் செல்வது, அவரை அடைவதற்கான ஆர்வம் என்பன பற்றிய உணர்வும் அறிவாகும். கடவுள் மட்டுமே உண்டு வேறெதுவும் இல்லை என்பதே முடிவான அறிவாகும். இந்த முடிவிலிருந்து எமது புரிந்துணர்வு வேறுபடுமாயின் நாம் அறியாமை நிலையிலேயே இருப்போம். இதுதான் சரியான அறிவு பற்றிய முழு விளக்கமுமாகும்.

### 12) அறிவு

அறியப்படவேண்டியது அறிவு பற்றிய பொருளாகும். இந்த உலகில் பல விடயங்களை அறிவுக்குரிய பொருள்களாக நாம் கருதுகின்றோம். நாம் கல்வியைப் பல கிளைகளாகப் பகுத்து வைத்திருக்கின்றோம். விஞ்ஞானம், கலை, அவற்றை அடையும் கருவிகள் எனப்

*பெட்டியில் வைக்காமல் எடுக்க முயற்சிப்பவர்கள் மூளைக்கோளாறு உள்ளவர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவற்றை நாம் வைத்திருக்கின்றோம். நாம் பல விடயங்களை அறிவதற்கு விருப்பம் உள்ளவர்களாக இருக்கின்றோம். பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் அறிவுக்குரிய விடயங்களாகப் பல பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. ஆனால் கீதையின்படி இக் குறித்த நிலைமையில் அறிவுப்பொருள், இறுதி உண்மையான கடவுள் ஆகும். சரியான அறிவின் ஒரு விடயமாக ஓர் உண்மையற்ற பொருள் இருக்கமுடியாது. ஒரு பொருள் உண்மையற்றதாயின் அதனுடைய அறிவு உண்மையாக இருக்கமுடியாது. ஒரு பொருள் உண்மையற்றதாயின் அது பொருளின் உண்மைத் தன்மையுடன் பொருந்தாது. இதுவே இவ்வளவும் கூறிய சரியான அறிவு அல்லது உண்மை அறிவாகும்.

## 13) அறிவுப் பொருள்

"நான் மிக உயர்ந்த குறிக்கோளைப்பற்றிப் பேசுவேன்; அறிவுப் பொருளைப்பற்றிப் பேசுவேன்" என்று பகவான் கூறுகின்றார். அந்த அறிவுப்பொருள் குறிப்பிட்ட ஓர் இடத்தில் உள்ளது அன்று. இதுவே அப் பெரிய பொருளின் விசேட பண்பாகும். இந்த உலகில் நாம் அறிகின்ற ஒவ்வொன்றும் அல்லது நாம் அறியவேண்டும் எனக் கருதும் எதுவும் ஏதோ ஓரிடத்தில், ஒரு காலத்தில் உள்ளதே. அந்தப் பொருள் எங்கும் நிறைந்துள்ளதன்று. ஆனால் இந்த உயர்ந்த பொருளோ எங்கும், எல்லா நேரத்திலும் உள்ளது. அதற்குக் கடந்த காலமோ, நிகழ்காலமோ, எதிர்காலமோ இல்லை. அது காலாதீதமாக என்றும் உள்ள பொருள். அது எல்லாவற்றையும் தன்னுள் அடக்கியிருப்பதால் குறிப்பிட்ட ஓர் இடத்தில் மட்டும் இருப்பதில்லை. கம்பீரமான இதிகாச மொழியில் எங்கும் நிறைந்துள்ள இறைவனைப் பற்றிப் பின்வருமாறு அந்தச் சுலோகம் கூறுகிறது. கடவுள் எல்லா இடங்களிலும் கைகளும், கால்களும், தலைகளும், கண்களும், காதுகளும் உடையவர். அவர் ஒரேவேளையில் உடனடியாகவே எல்லாவற்றையும் புரிந்துகொள்கிறார், எல்லாவற்றையும் அறிந்துகொள்கிறார். எல்லா வழிகளின் ஊடாகவும், எல்லாப் பொருள்களையும் விளங்கிக்கொள்ளுகின்றார். எல்லாம் பகுக்கப்பட்டதுபோல் தோன்றினாலும் அவை பகுக்கப்படாமலே உள்ளன. அது தன்னை இடையிடையே வெளிப்படுத்திக்கொள்வதுபோலத் தோன்றினாலும் எக்காலங்களிலும் இருந்துகொண்டே உள்ளது.

## 14) குணங்கள் அற்றது

அது ஒவ்வொரு பண்பையும், குணத்தையும் உயிரப்புள்ளதாகச் செய்தபோதும் பண்புகளினதும், குணங்களினதும் பிடிக்குள் சிக்கிக்கொள்ளாது சுதந்திரமாக உள்ளது. அது எல்லோருடைய இதயங்களிலும் தான் இருந்தபோதும் எல்லாப் பொருள்களுக்கும் அப்பால் உள்ளது. அது அசைவதாகவும் அதேவேளை அசையாததாகவும் உள்ளது. அந்த ஒளியே சூரியனுடைய ஒளிக்குங்கூட ஆதாரமாக உள்ளது. சூரிய ஒளிப்பிரகாசம் இறைவனது புகழின் ஒரு நிழல் மட்டுமே. இந்த ஆச்சரியமான ஒளி எங்கே இருக்கிறதென ஒருவர் ஆச்சரியப் படக்கூடும். அது எங்களுக்குள்ளேயே இருக்கின்றது. நாம் எங்கெங்கெல்லாம் சென்றபோதும்

*எவ்வளவுதான் நேசித்தாலும், நமது பணிகளில் பங்குபெற வராதுபோனால் பயனில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கங்கெல்லாம் அதனை எடுத்துச் செல்கிறோம். ஆயினும் இந்த ஞான ஒளிவிளக்கை வைத்துக்கொண்டு நாம் இருளில் தடுமாறிக்கொண்டு இருக்கின்றோம். அந்த என்றும் உள்ள ஒளிப்பிரகாசம் எமக்கு உள்ளேயே இருக்கின்றது. நாம் இங்கே அறிவுப் பொருளின் பண்புகளது ஒரு சுருக்கமான இருப்பாக உள்ளோம். அந்த இருப்பும் கடவுளினது இருப்பே. அதனைக் கவிதா சக்தியின் ஒரு உற்சாகம் அளிக்கும் மொழியில் நாம் வெளியிடுகின்றோம்.

## 15) புலக்காட்சி உளவியல்

சரியான அறிவு எது என்றும் அதனைப் பெறுகின்ற தனிமனிதன் யாரென்றும் நாம் அறிவோம். அறிபவனுக்கும் அறியப்பட்ட பொருளுக்கும் இடையே உள்ள தொடர்பே புலக் காட்சி உளவியலினது முழு மூலமும் ஆகும். அகம் புறத்தில் செல்வாக்குச் செலுத்துவதாயும், புறம் அகத்தில் செல்வாக்குச் செலுத்துவதாயும் உள்ளதை நாம் அறியாமல் இருக்கின்றோம். உண்மையில் ஒன்று மற்றதில் செல்வாக்குச் செலுத்துகின்ற பிரச்சினையே அங்கு இல்லை. அல்லது ஒன்று மேலானது மற்றது கீழானது என்பதற்கு அங்கு இடமே இல்லை. அவை இரண்டும் ஒன்றுக்கொன்று சமனானவையே. ஏனெனில், ஒன்று மற்றதற்குள் பாய்வதோடு, ஒன்று மற்றதில்லாமல் இருக்கமுடியாது. எனவே அகமும் புறமும் அல்லது புருஷனும் பிரகிருதி யும் ஒரே மாதிரி எங்கும் நிறைந்துள்ள கடவுளின் இரண்டு கரங்களாகும். சாங்கிய தத்து வத்தில் உள்ள புருஷனும் பிரகிருதியுமான அவ்விரண்டு கரங்களுக்கு ஊடாகக் கடவுளே செயல்படுகின்றார். நாம் பேசிக்கொண்டிருக்கும் அகமும் புறமும் அல்லது பிரக்ஞையும் சடமும் இரண்டு வேறுபட்ட விடயங்கள் அன்று. அவை ஒரே அழகான இருப்பின் இரண்டு தன்மைகளாகும். இங்கேதான் கீதை துவித சாங்கிய தத்துவத்துக்கு மேலாகச் சென்று தலையையும், தோள்களையும் பற்றிப் பேசுகின்றது. புருஷன் என்பவன் பிரகிருதி என்ற வழியினூடாகச் செயல்படுகின்றான். புருஷன் என்பது ஆள்சாராப் பிரக்ஞை ஆகும்.

(தொடரும்...

---

## மனம் நாட அருள் சுரந்த பெரும் வேலவா

கண் தேடியும் காணாத பெரும் தெய்வமே
கடல் அருகோடு வேலாகிட மனம் கொண்டாயோ
மண் வாழ்வினில் கலியுக மெய்த் தெய்வமே
மனம் நாடிட அருள் சுரந்த பெரும் வேலவா
முன்னாளினில் அன்னை தந்தையை நீ மதித்தாய்
முழு நினைவாகி அழியாத நல்வரம் ஏற்றினாய்
பண் ணோடுனைப் பாடவே நல் மனம் ஆக்கினாய்
பதி செல்வச் சந்நிதியில் உறை வேலவா.

*-சின்னப்பு தனபாலசிங்கம்-*

*ஒப்புரவு இல்லாத உறவு உப்புக்கும் பயனில்லாதது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் மெய்ப்பொருள் தேடுங்கதை நல்ல விவசாயம் செய்வது போன்றதே

*-திருமதி புவனராணி இரகுநாதன்* அவர்கள்-

மிகுந்த சிரத்தையோடு மேற்கொள்ளும் பயிர்ச்செய்கை போன்றதே நாம் சிவநெறி நின்று ஆன்ம ஈடேற்றத்திற்கு மேற்கொள்ளும் வழிமுறைகளும் தென்படுகின்றன. எல்லோருக்கும் தமது வாழ்வின் இறுதி இலக்கு சிவனை அடைந்து பேரின்பம் அனுபவிப்பதே. ஆதலால் நாம் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறி சிவநெறியாக அமைவதுதான் நேர்வழி. இதனை உறுதியாக நம்பிய சாக்கிய நாயனார் அவர்கள்

"செய்வினையும் செய்வானும் அதன்பயனும் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றிற்கில்லை என
உய்வகையால் பொருள் சிவன் என்று அருளாலே உணர்ந்தறிந்தார்"

-பெரியபுராணம் 12-34-5.

பௌத்தர் தாங்கும் "சிவுறு" போர்த்திய சாக்கியநாயனார் தினமும் தன் வழியிலே காணும் சிவலிங்கப் பெருமானுக்கு கல்லெறிந்துவிட்டுப் போவார். இச் செய்கையால் இவருக்கு நாளடைவில் சிவனிடத்திலே பேரன்பு மலர்ந்தது. ஒருநாள் தான் கல்லெறிய மறந்ததை நினைந்து மீண்டும் அவ்விடத்துக்கு ஓடோடிச் சென்று கல்லெறிந்துவிட்டு வந்து உணவு அருந்தினார். அந்தக் கல் அன்று பூவாகமாறி சிவார்ப்பணமாகியது. சிவனருளாலே தினமும் இது தொடர்ந்து நடைபெற்றது. இதனால் உறுதியான அன்புகொண்ட சாக்கிய நாயனார் தனது உடையைக்கூட மாற்றுவோம் என்று யோசிக்காது சிவநெறியிலே நின்றார். இதனை சேக்கிழார் நாயனார் தனது மிக இனிமையான தமிழில்

"எந்நிலையில் நின்றாலும் எக்கோலங் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள் என்றே
துன்னிய வேடந்தன்னைத் துறவாதே தூயசிவம்
தன்னைமிகும் அன்பினால் மறவாமை தலைநிற்பார்" என்று பாடினார்.

பெரியபுராணம் 12-34-6.

சிவஞானபோதம் பதினொன்றாம் சூத்திரம் சிவனை மறவாது அன்பு செய்தால் அவனிடத்தில் ஒன்றுபட்டு இன்புறலாம் என்கிறது.

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே.

-சிவஞானபோதம் சூத்திரம் 11.

*புறத்தே புதுமை காட்டி அகத்தே பழைமையை ஒளித்து வாழ்வோரும் உண்டு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகினைக் கண் காண்பதற்கு ஆன்மா காட்டி நிற்பதுபோல சிவன் ஆன்மாவையும் காணுமாறு செய்யும். "பரணடிக் கன்பில்லார் செய்யும் புண்ணியங்கள்கூட பாவமாகி விடுவதை உணர்ந்து நாம் எப்போதும் எதைச் செய்தாலும் சிவன் செய்விப்பதாகவே நினைந்து இன்புற வேண்டும்.

நமக்குத் தேவையான பயிரை வளர்த்தெடுக்க நாம் மிகுந்த பிரயாசைப்படுவது போலவே நமது வாழ்க்கை நெறியையும் சிவநெறியாகவே பேணினால் இறை இன்பம் இலகு வாகும். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் பயிரோடு தோன்றும் களை பூண்டுகள் போன்று நாம் விரும்பிய வழியிலே செல்லத் தடையாக இருக்கும். சிவநெறி என்ற பயிர் வளர்க்கும் முறையை நாம் முழுமையாக அறியவிடாது மறைக்கும். களையகற்றி முறையாகப் பயிர் செய்யும் திறமை பெற்றுவிட்டால் அதை அன்போடு பிறருக்கும் உதவி சிவனை நாம் கண்ணாரக் கண்டு மகிழலாம். இயற்கையில் நமது கண்களை மூடிக்கொள்ளு மளவு வளர்ந்து களைகள் பெருந்தடையாக உள்ளனவே. சிவப் பயிர் வளர்க்கும் முறையை நாம் ஒருவரும் முழுமையாக அறிந்துவிடவில்லை. இதனை அறிந்தவர் எமக்குச் சொல்லவுமில்லை. வாழ்வில் காமம் வெகுளி மயக்கம் என்பன களை பூண்டுகள்போலப் பல்கிப் பெருகுகின்றன என்றும் இப்பூண்டுகளை அகற்றி சிவநெறிப் பயிரை வளர்க்கும் வழி அறிந்தோருக்கு சிவன் வெளிப்பட்டுத் தோன்றுவதால் அப்படிப்பட்டோர்பால் தனது உள்ளம் அன்பூறி ஆர்வம் பெருகிக் கிடக்கிறது என்றார் திருமூலநாயனார்.

தூறு படர்ந்து கிடந்தது தூநெறி
மாறிக் கிடக்கும் வகையறி வாரில்லை
மாறிக் கிடக்கும் வகை அறிவாளர்க்கு
ஊறிக் கிடந்ததென் உள்ளன்பு தானன்றே.

-திருமந்திரம் 2867.

இப்படியாக சான்றோர் கூறியவையனைத்தும் நாம் நன்னெறி என்று பின்பற்ற வேண்டு வன. சிவனருள் இருந்தால் நாமேதான் நமது ஆற்றலால் எல்லாவற்றையும் ஒழுங்காகச் செய்துவருகிறோம் என்ற சிந்தனை கெட்டுவிடும். நமது கருமங்களெல்லாம் சிவகருமமாகி வினை கடந்து நிற்கும். நமக்கு நல்ல குருமூலம் ஞானக் கண் கிட்டும். அந்த ஞானக்கண்ணை ஏற்கும்போது நாமும் உள்ளம் அன்பூறி ஆர்வத்தோடு அந்தப் பேரின்பத்தை அமைதியாக அணு அணுவாக அனுபவித்துக் கொண்டிருப்போம்.

நாம் வளர்க்கும் சிவப்பயிர் செழிப்பாக வளரும்போது முன்பிருந்த களை பூண்டுகள் எல்லாம் வளர்ச்சி குன்றி இல்லாமற் போய்விடுகின்றன. இந்தத் திருவருள் வழியில் தளராது நிற்போருக்கு மீண்டும் பிறப்பு இறப்பு என்பனவும் அதனால் வரும் அல்லல்களும் விலகிவிடும். முளைவிட்ட பயிர் செழிப்பாக வளர நமது பெத்தநிலையில் இயமம் நியமம் என்ற இரண் டும் மிக முக்கியமானவை என்று ஆசிரியர் திருமூலர் கூறியதுபோலவே ஔவையார் திரு வள்ளுவர் போன்றோரும் பல வழியிலும் அறவழியைக் காட்டியுள்ளார்கள். ஔவையார் நிலத்தை நோக்கி,

*நாலு பேர் நன்மைக்கு மட்டுமல்ல; தீமைக்கும் சேர்கிறார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாடா கொன்றோ காடா கொன்றோ
ஆலவா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்ல ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"

என்று பாடினார்.

நிலமே நீ காடாக இருக்கலாம். பள்ளமாக இருக்கலாம். மேடாக இருக்கலாம். இவையெல்லாம் ஒரு பொருட்டல்ல. உன்னிடத்தே வாழும் மக்கள் எவ்வளவு நல்லவர்களோ அவ்வளவுக்கே நீயும் நல்லவனாகக் கருதப்படுவாய் என்றார்.

திருவள்ளுவர் பகைத்திறம் தெரிதல் என்ற அதிகாரத்திலே

"இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கை கொல்லும் காழ்த்த விடத்து"

என்று திருக்குறள் 879இலே முள்மரத்தை இளமையிலேயே களையவேண்டும் என்றும் அது வைரம் ஏறி முதிர்ந்த பிறகு களைவோரின் கையை வருத்தும் என்றும் அறிவுறுத்தினார். நமது சிவநெறி நன்றாக அமையவேண்டுமாயின் நெருஞ்சி, தொட்டாவாடி, காரை, இக்கிரி போன்ற களைகளைக் களையவேண்டியது கடமை என்றார். நமது கொடிய வினைகளும் அதேபோல அறிந்து உடனே அகற்றவேண்டியவைதான்.

"செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி"

-திருக்குறள் எண் 40.

இக் குறள் அறன்வலியுறுத்தல் அதிகாரத்தில் இயம நியமம் பற்றி நேரடியாகவே உணர்த்துகிறது. சைவநெறிப் பயிரை வளர்க்கும் முறை தெரிந்திருப்பதால் அவசியம் நல்வாழ்வு கொடுபடும். நாம் பிறவி எடுக்கமுன்னரே ஆணவம் என்ற சகசமலம் தனிவகைக் களையாகி ஆன்மாக்களை முற்றுமுழுதாக மூடி மறைக்கிறது. பெத்த நிலையிலிருந்து தூயதான பயிர் முளைக்கும்வரை அதாவது சிவத்தையடையும்வரை வேறு வழி அறியாது முடங்கிக் கிடக்கின்றன. இருளிலே அமுந்துகின்றன. இப்படி இன்னலுறும் ஆன்மாக்கள் மேல் சிவன் காட்டும் கருணையினால் செய்த வினைக்குத் தகுந்த சரீரத்தைப் பெற்று பிராரத்த வினையின் பயனாக புதியவகைக் களைகளோடு புதிதாக தோற்றம் கொடுக்கின்றன. இவை ஆணவத்தின் ஆதிக்கத்தை சிறிது குறைக்கின்றன. இந்நிலையில் கன்மம் செய்யும் உயிர்கள் இப்படியே பெருகிக்கொண்டு போகும் களை பூண்டுகளாகிய காமம், வெகுளி, மயக்கம் போன்றவற்றை வகையறிந்து கட்டுப்படுத்தி திருவருளை நாடினாலன்றி இவற்றை நீக்கி நல்ல நெறியில் ஒழுகமுடியாது அலமந்து போகின்றன. அப்போது மாயையிலிருந்து தனு கரண புவன போகங்களை சிவன் உண்டாக்கிக் கொடுத்து சிறிது ஆறுதல் வழங்கி ஆன்மாக்களைப் பக்குவப்படுத்தி ஈற்றில் முத்தியும் கொடுத்தருளுகிறார். இப்படியே சிவன்தான் எமக்கு என்றும் மாறாத அன்புடன் வேண்டிய அனைத்தையும் உபகரிப்பவர் ஆதலால் நமக்கு சிவநெறியே சிறந்தது. அதனை மறக்க முயலாதீர்கள்! பெரு நட்டம் அடையாதீர்கள்!!

*உழைக்காமல் வாழநினைப்பது மனித இயற்கை. உழைத்து வாழநினைப்பது அறிவுடைமையின் அழகு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...)

# திருக்கயிலாயம்

– திரு வி. செல்வரத்தினம் அவர்கள் –

இனி முதலில் நேபாள நாட்டைப் பற்றிச் சற்றுப் பார்ப்போம். நேபாள நாடு ஆசியாக் கண்டத்தில் இந்தியாவின் அருகில் இருக்கிறது. நேபாளத்தின் சொனாலியாக இந்தியாவின் எல்லையில் இருக்கிறது. இதன் விஸ்தீரணம் 140797 சதுர கிலோமீற்றர் ஆகும். இலங்கையின் விஸ்தீரணத்தைப்போல் $2^1/_4$ மடங்கு பெரியது. இந்த நாடு இமயமலையின் கீழ்ப்பக்கத்தில் அமைந்துள்ளது. இங்கே ஏறத்தாழ $1^1/_2$ கோடி மக்கள் வாழ்கிறார்கள். இவர்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள். நோபாள நாட்டு மக்களின் மொழி நேபாளி. இங்கு மன்னன் குடும்பமே நாட்டை ஆட்சி செய்து வந்தது. ஆனால் தற்போது முடியாட்சியை மாற்றிக் குடியாட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இந்த நாட்டின் குடியடர்த்தி குறைவு. இதன் தலைநகரம் காத்மண்டு ஆகும். இதன் மறுபக்கம் சீனா எல்லை கோடாற்றில் உண்டு. நேபாளிய பெண்கள் எந்த வேலையிலும் மிகவும் சுறுசுறுப்பாக இருப்பார்கள். எந்நேரமும் ஏதாவது தொழில் செய்துகொண்டேதான் இருப்பார்கள்.

நேபாளத்தில் அநேக மலைகள் இருக்கின்றன. அந்த மலைகளிலிருந்து வரும் ஒன்பது நதிகள் நதி நாராயணி நதி எனப்படும். இங்கே அநேகமாக மழை பெய்துகொண்டே இருக்கும். நேபாளிகள் சிறந்த போர் வீரர்கள். பலசாலிகளாக இருப்பார்கள். நேபாள மக்கள் இங்குள்ள மலைச் சரிவுகளைப் பயன்படுத்திப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவார்கள்.

நேபாளத்தில் கூக்கூர்த்திகாள் என்று ஒரு தினம் இருக்கிறது. அன்றைய தினம் நாய்களுக்கு மகிழ்ச்சியான நாள் ஆகும். அன்று நாய்களைக் குளிப்பாட்டிப் பெரிய பொட்டு வைத்து, மாலை அணிவித்து வழிபடுவார்கள். இதனை இங்குள்ள மக்கள் நரக சதுர்த்தி என்று சொல்வார்கள். அன்று நாய்களுக்குத் தயிர்ச்சோறு வைத்து வழிபடுவார்கள். அன்றைய தினம் வீட்டிலுள்ள நாய்களுக்கு மட்டுமன்றித் தெருநாய்களுக்கும் மாலை அணிவித்து, திலகமிட்டு நேபாளிகள் வழிபடுவார்கள். நாய் வைரவரின் வாகனமாகும்.

பின்னர் நேபாள கார்டன் விடுதியிலிருந்து திருக்கயிலாய யாத்திரையைத் தொடங்க வேண்டும். இதற்கெனப் பல வாகனங்கள் இருக்கின்றன. நாம் நேபாள நாட்டுக்கூடாகப் போய்க்கொண்டு இருக்கும்போது, வழியில் இரு பக்கமும் நேபாளப் பெண்கள் பலவிதமான பழ வகைகளை வைத்து விற்பனை செய்வதைப் பார்க்கக்கூடியதாக இருக்கும். யாத்திரிகர்கள் விரும்பினால் விரும்பிய பழ வகைகளை வாங்கலாம். இப்படியே போய்க்கொண்டிருக்கும்போது முதலில் பனெபா என்ற சிறிய ஊர் வரும். அங்கே மக்கள் குறைவாகத்தான் இருக்கிறார்கள். பெரிய கடைகள் ஒன்றும் கிடையாது. பின் துலிகல் என்ற ஊரின் பள்ளத்தாக்கின் வழி யாகப் போனால், வழியில் பல பூக்கடைகளைப் பார்க்கலாம். யாத்திரிகர்கள் விரும்பிய பூக்களை வாங்கலாம். போய்க்கொண்டு இருக்கும்போது, இராமர் கோவில் ஒன்று வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இராமர் கோவிலுக்குப் போய் வணங்க வேண்டும். பின் வழியில் துலால்காட் என்ற இடத்தில் இந்திரா நதி என்ற ஆறு ஓடிக்கொண்டிருக்கும். அதன் பாலத்தின் மேலாகத்தான் வாகனம் போகவேண்டும். பின் இவ்வழியாகப் போய்க்கொண்டிருக்கும்போது, அங்கே "சுன்கோசி, போட்டேகோசி" என்ற இரு ஆறுகள் வரும். இந்த ஆறுகளைப் பார்க்கக் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

வழிகளில் நேபாளப் பெண்கள் அதிகமாக வேலை செய்துகொண்டிருப்பார்கள். அவர்கள் யாத்திரிகர்களைக் கண்டவுடன் கையாட்டித் தங்கள் சந்தோஷத்தைத் தெரிவிப்பார்கள். யாத்திரிகர்களுக்கு அவர்களின் பாஷை தெரியாது. அது ஒரு பிரச்சினை ஆகும்.

வீதிகள் இரு பக்கங்களிலும் மலைகளிலிருந்து நீர்வீழ்ச்சிகள் விழுந்துகொண்டிருக்கும். அது பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். இப்படிப் போய்க்கொண்டிருக்கும்போது, தாத்தோபாணி என்ற இடத்தை அடைய வேண்டும். இதுதான் நேபாள எல்லையில் இருக்கும் தாத்தோபாணியின் முடிவிடம் கோடரி ஆகும்.

கோடரி என்ற இடத்தில் பிரண்ஷிப் பிரிட்ஜ் என்று ஒரு பாலம் உண்டு. பாலத்தின் மறுகரையில் சீனா நாடு ஆரம்பிக்கிறது. யாத்திரிகர்கள் இப் பாலத்தால் நடந்து கடந்து போக வேண்டும். யாத்திரிகர்களின் பயணப் பைகளை திபெத்தியர்கள் பத்திரமாக எடுத்துச் சென்று கொடுப்பார்கள். சீனா என்று சொல்வது, உண்மையில் அது திபெத் நாடுதான்.

பின் இங்கிருந்து ஜீப் வண்டி மூலம் பயணத்தைத் தொடங்க வேண்டும். இரு மணித்தியாலத்தில் ஜாங்கு என்ற இடத்திற்குப் போய்ச் சேரலாம். அங்கேதான் சுங்கச்சாவடி கந்தோர் இருக்கிறது. அங்கே யாத்திரிகர்களின் கடவுச்சீட்டுக்கள் யாவும் சரிபார்க்கப்பட்டு எடுத்துச் செல்லும் பொருட்களையும் சரி பார்த்து, விசா 14 நாட்களுக்குக் கொடுப்பார்கள். அன்று இரவு ஜாங்மு என்ற இடத்தில் அநேக விடுதிகள் இருக்கின்றன. ஏதாவது ஒரு விடுதியில் இரவு தங்கலாம். மேலும் மூன்று நட்சத்திர ஹோட்டலும் உண்டு.

இனி திபெத் நாட்டைப் பற்றியும் திபெத்தியர்களைப் பற்றியும் பார்ப்போம். திபெத் ஆசியாக் கண்டத்தில்தான் இருக்கிறது. இமயமலைக்கு வடக்கேயுள்ள கார்கோரம் மலைக்கும் குவைனிலன் மலைக்கும் இடையில் இந்த நாடு இருக்கிறது. உலகில் உயர்ந்த சிறந்த பீடபூமி இதுவேயாகும். இது சீனா நாட்டுடன் சேர்ந்தும் கடல் மட்டத்திலிருந்து 14000 அடி உயரத்தில் இருக்கிறது. உயரத்தில் இருப்பதால் சரியான குளிராக இருக்கும். இந்த நேரத்தில் யார் ஒருவரும் அங்கே போகமுடியாது.

இந்த நாட்டின் பரப்பளவு 814000 சதுர மைல்கள் ஆகும். தலைநகரம் இலாசா ஆகும். இந்த நாடு எல்லா இடமும் வெட்ட வெளிச்சமாக இருக்கிறது. இங்கு போக்குவரத்துக்குச் சிறந்த சாலை கிடையாது. நாட்டைச் சுற்றி மலைகள் இருப்பதால், மழை மிகக் குறைவு. இங்குள்ள பெரிய ஏரிகளிலிருந்து இந்து, பிரமபுத்திரா ஆறுகள் உற்பத்தியாகி இங்குள்ள நீண்ட பள்ளத்தாக்கு வழியாக இந்தியாவுக்குள் புகுகின்றன. திபெத்தின் மிகப்பெரிய கிராமம் தக்கணக் கோட்டையாகும். இக் கிராமம் கர்னாலி என்னும் நதிக்கரையில் இருக்கிறது. இந்த நதி பிரமபுத்திரா நதியின் உபநதியாகும்.

*பணம் பெறுவதற்குரிய உழைப்பை விரும்புகிறவன் மனிதனாகின்றான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனா நாடுதான் இந்த நாட்டைத் தன்வசம் வைத்திருக்கிறது. எனவே, இங்கே பெரிய பதவிகளில் சீனர்கள்தான் இருப்பார்கள். திபெத்தியர்கள் கூலி வேலைதான் செய்வார்கள். இவர்கள் மிகவும் கஸ்டமான நிலையில்தான் வாழ்கிறார்கள். திபெத்திய பெண்கள் பல தாரம் திருமணம் செய்வார்கள். இவர்கள் பாமர மக்கள். படிப்பறிவு கிடையாது. அநேகமான பெண்கள். ஜீன்ஸ் அணிந்திருப்பார்கள். இவர்கள் மிக அழகானவர்கள். எல்லா ஆண்களுடனும் வெட்கமின்றி மிக நெருங்கிப் பழகுவார்கள். ஆனால் குளிப்பதும் துணிகள் துவைப்பதும் மிகக் குறைவு. ஆண்கள் அருவருக்கத்தக்க முறையில் வெறும் ஊத்தையாகத்தான் இருப்பார்கள்.

இனி முதலில் சிவபெருமானின் இருப்பிடமான கயிலாயமலையைப் பற்றிச் சற்றுப் பார்ப்போம்.

கயிலைமலை அமைதியும் தெய்வீகமும் வாய்ந்த திருத்தலம். உலகின் எந்த மொழியிலும் கயிலாயத்தின் அழகை வர்ணிக்கக்கூடிய பொருத்தமான வார்த்தைகள் கிடையாது. அது வர்ணிக்கமுடியாத கனவுச் சித்திரம். நம் கண்ணெதிரில் வானில் மிதப்பது போன்ற தோற்றம் அளிக்கிறது. இம் மலையைச் சில நேரங்களில் பனி மூடியிருக்கும். சில நேரங்களில் பனிக்கட்டிகளால் அபிஷேகம் செய்தது போல் இருக்கும்.

கயிலாயமலை நீண்ட தொடர் உடையது. சுற்றிலும் மலைகள் உள்ளன. இந்த ஒரு சிகரம் மட்டும் கம்பீரமாக வெண்பனிப் போர்வையால் மூடப்பட்டு ஏறத்தாழ இலிங்க வடிவில் அமைதியாக, அழகாகக் காட்சியளிக்கிறது. இதன் உச்சிக்குச் செல்ல முடியாது.

கயிலைமலையை வலம்வரும்போது பல இடங்களில் மிக அருகில் தரிசனம் கிடைக்கும். வெவ்வேறு இடங்களிலிருந்து கயிலைமலையைத் தரிசிக்கும்போது, சிவலிங்கத்தின் ஒவ்வொரு மாதிரியான தோற்றங்களைத் தரும். மற்றும் சில இடங்களில் மும்மூர்த்திகளின் திருவுருவமாய்த் தெரியவரும்.

இந்தக் கயிலாயமலை இந்துக்களுக்கு மட்டுமல்ல, சமண மதத்தவர்களும் பௌத்தர்களும் பௌத்த மதத்திற்கு முன்பு திபெத் நாட்டில் முன்பு இருந்த "பான்பேர" என்ற மதத்தினருக்கும் ஆக இந் நால்வகை மதத்தவரின் புனிதமான இடமாகக் கருதப்படுகிறது.

விடுதியில் இரவு உணவை உண்ணலாம். ஆனால், அது அவ்வளவு விருப்பமாக இருக்கமாட்டாது. சுத்தம் மிகக் குறைவு. ஜாங்மூவில் மூன்று நட்சத்திரக் ஹோட்டலில் தங்கக்கூடிய வசதிகள் உண்டு. காலையில் ஹோட்டலில் இருந்து யன்னல் ஊடாகப் பார்த்தால், இமயத்தின் வெள்ளிப்பனி பரவியிருப்பதைப் பார்க்கலாம். அது மிகவும் அழகாக இருக்கும்.

அடுத்தநாள் காலை உணவை ஒரு சிற்றுண்டிச்சாலையில் முடித்துக்கொண்டு ஜாங்மூவிலிருந்து நயாலம் என்ற இடத்திற்குப்போக வேண்டும். ஜாங்மூவுக்கும் நயாலத்திற்கும் இடை தூரம் 25 கிலோமீற்றர் ஆகும். போய்க்கொண்டிருக்கும்போது வழி வழியே மலைகளிலிருந்து பனி உருகி வந்துகொண்டிருப்பதைப் பார்க்கக்கூடியதாக இருக்கும். இது மிகவும் அழகாக இருக்கும். (தொடரும்...

*தனிமனிதச் சிக்கல்களுக்குத் தீர்வு காண சமுதாயத்தைத் திரட்டுவது தவறு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 93

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 வெள்ளத்தைத் திறந்திடல்தான் முறையென்று ஆகாது
அதன் பாதையினை அடைக்காமல் இருப்பதுவே முறையது போல்
கொடை கொடுக்கும் முறையேதான் முறையென்று ஆகாது
பிறர் பிழைப்பைக் கெடுக்காமல் இருப்பதுவே முறையதுவாம்.

02 முற்றத்தைக் கூட்டுதல் தான் முறையென்று ஆகாது
அதில் குப்பையினைக் கொட்டாமல் இருப்பதுவே முறையது போல்
திருந்திவிட்டோம் என்றிடல்தான் முறையென்று ஆகாது
நாம் கெட்டிடாமல் இருப்பதுவே முறையான முறையதுவாம்.

03 சிரமதானம் செய்திடல் தான் முறையென்று ஆகாது
கல்லுமுள்ளை கொட்டாமல் இருப்பதுவே முறையதுபோல்
சமாதானம் செய்திடல்தான் முறையென்று ஆகாது
யாரும் சண்டையினைத் தொடங்காமல் இருந்திடலே முறையதுவாம்.

04 வேலிவாசல் அடைத்தல் தான் முறையென்று ஆகாது
யாரும் எல்லைகளைத் தாண்டாமல் இருப்பதுவே முறையதுபோல்
கோடேறி வழக்கிடல்தான் முறையென்று ஆகாது
ஒரு கோடுபோட்டு வாழ்வதுவே வாழ்கின்ற முறையதுவாம்.

05 மூக்கினைப் பொத்துதல் தான் முறையென்று ஆகாது
நாற்றமெனில் புதைத்திடலே முறையான முறையதுபோல்
சோகத்தைச் சுமப்பதுதான் முறையென்று ஆகாது
சோலிகளை வளர்க்காமல் இருந்திடலே முறையதுவாம்.

06 வாங்குபவர் மலிவாக வாங்கிடவே முயற்சிப்பர்
விற்பவர்கள் அதிகவிலை விற்றிடவே முயற்சிப்பர்
பெறுமதிக்கு வாங்குவோரும் விற்போரும் தோன்றுமட்டும்
வாழ்க்கையுமோர் வர்த்தகம் தான் என்ற நிலை மாறாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 கொடுப்பவர்கள் குறைத்துத்தான் கொடுப்பதற்கு முயற்சிப்பர்
எடுப்பவர்கள் கூடுதலாய் எடுத்திடத்தான் முயற்சிப்பர்
உரியபடி கொடுப்பவரும் எடுப்பவரும் தோன்று மட்டும்
வாழ்க்கையுமோர் வர்த்தகம் தான் என்றநிலை மாறாது.

08 நம்நலனைப் பேணிடவே நாமிங்கு முயற்சிப்போம்
தம்நலனைப் பேணிடவே பிறரிங்கு முயற்சிப்பர்
பிறர்நலனைத் தம்நலனாய் பேணுபவர் தோன்றுமட்டும்
வாழ்க்கையுமோர் வர்த்தகம்தான் என்றநிலை மாறாது.

09 நம்பக்க நியாயமதே சரியெனநாம் முயற்சிப்போம்
தம்பக்க நியாயமதே சரியென பிறர் முயற்சிப்பர்
நியாயத்தை நியாயமென்போர் நீழுலகில் தோன்றுமட்டும்
வாழ்க்கையுமோர் வர்த்தகம்தான் என்றநிலை மாறாது.

10 இன்புறுவோர் மேலும் தாம் இன்புறவே முயற்சிப்பர்
துன்புறுவோர் இன்புறவே இடையறாது முயற்சிப்பர்
இன்பமும் துன்பமும் சகஜம் என்போர் தோன்றுமட்டும்
வாழ்க்கையுமோர் வர்த்தகம்தான் என்றநிலை மாறாது.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செந்திவேல் மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செந்திவேல் மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*மேலாண்மை என்பது தரம் குறைந்த விமர்சனம் அல்ல. பணிகளை உடனிருந்து செய்வித்தல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவடிப் பெருமை

– திரு செ. பாலச்சந்திரன் அவர்கள் –

தமிழ் மூதாட்டி ஔவையார் அருளிய "விநாயகர் அகவல்" என்ற பாடலில் "....குருவடி வாகிக் குவலயந் தன்னில் திருவடி வைத்துத் திரமிது பொருளென..." திருவடியின் பெருமையைக் குருவின் திருவருள் பெருமையாகக் குறிப்பிடுகிறார். சிவபெருமான் நேரடியாகப் பரமாசாரியராக வந்து நயனதீட்சை, வாசகதீட்சை, திருவடிதீட்சை என்பவற்றை மாணிக்கவாசக சுவாமிகளுக்கு வழங்கியுள்ளார் என்பதைத் திருவாதவூரடிகள் புராணம் பக்தி நயம்பட "திருப் பெருந்துறைச் சருக்கத்தில்" குறிப்பிடுகின்றது. இதனாலன்றோ மணிவார்த்தையாக மாணிக்க வாசக சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகத்தின் முதல் பதிகமாகிய சிவபுராணத்தில் எம்பெருமானை மந்திர சொருபமாக "நமச்சிவாய வாஅழ்க" எனப் போற்றி அடுத்து "நாதன் தாள் வாழ்க!" என்று திருவடியின் சிறப்பை உணர்ந்து, எம்மையும் உணருமாறு

"இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகமமாகி நின்றண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகனனேகன் இறைவன் அடி வாழ்க!
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி..."

எனச் சிவபுராணத்தில் "திருவடிப் பெருமை"யை உணர்த்தி நிற்கின்றார். எட்டாம் திருமுறையில் திருக்கோவையார் என்ற நூலும் மணிவாசகப் பெருமானால் அருளப்பெற்ற நூலே! இது திருச்சிற்றம்பலக் கோவையார் எனச் சிற்றம்பலத்துடன் இணைத்துப் பேசப்படும் பெருமையுடையது.

ஆநந்த வெள்ளத் தழுந்துமோர் ஆருயிர் ஈருருக்கொண்டு
ஆநந்த வெள்ளத் திடைத்திளைத் தாலொக்கும் அம்பலஞ் சேர்
ஆநந்த வெள்ளத் தறைகழ லோனருள் பெற்றவரின்
ஆநந்த வெள்ளம் வற்றாது முற்றாதிவ் வணிநலமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்ச கிருத்திய நடனம் ஆடும் தில்லைக் கூத்தனின் தூக்கிய திருவடி "அருளல்" என்ற கிருத்தியத்தைக் குறிக்கும். அவ்வாறு எம்பெருமானின் அருள்பெற்று ஆநந்த வெள் ளத்துள் திளைப்பவர்க்கு அந்த ஆநந்த வெள்ளம் என்றும் வற்றாது நலஞ்சேர்க்கும் என்று மேலேயுள்ள பாடலில் குறிப்பிடுவார்.

உரையால் உணரப்படாத, எழுத்தால் விளக்கமுடியாத இவ்வண்ணம் எவ்வண்ணம் என்று எண்ணாது,

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

என்று ஞானசம்பந்தப் பெருமான் மூன்றாந் திருமுறையில் இயம்பியுள்ளார். திருவடியை இடையறாது எண்ணுதல் வேண்டும். (வைகலும் எண்ணில்) என்கிறார். நல்லகதி எனக் குறிப்பிடுவது சிவகதி (திருவடிப்பேறு) ஆகும். திருவருட் சக்தியாகிய சிவசக்திப் பேறு கிட்டியதும் சத்தினிபாதப்பேறு பெற்றுப் பெருவாழ்வு வாழலாம் என்பதை ஒரே பாடலில் ஞானக்குழந்தை நயம்படப் பாடி வைத்துள்ளார்.

"நாவுக்கரசு" என்று எம்பெருமானால் பாராட்டுப் பெற்றவர் திருநாவுக்கரசு நாயனார். தாம் இறுதியாகப் பாடிய பதிகத்தில் இறைவன் திருவடியை அடைவதை

"எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்..."

என்று திருவாய் மலர்ந்தருளியதை நோக்கலாம். அப்பர் பெருமான் வரலாற்றைப் பெரிய புராணம் வரலாற்று ரீதியாக ஆராய்ந்து சிறப்புறத் தொகுத்துள்ளது திருவருட் சிறப்பேயாகும். (தொடரும்...

## இயற்கையின் கட்டளை

ஒரு பெரிய மீன், சிறிய மீன் ஒன்றை உண்ண முயற்சிக்கிறது. அப்போது அந்தச் சிறிய மீன், நான் உனக்கு என்ன கெடுதல் செய்தேன். ஏன் என்னை விழுங்கப் பார்க்கிறாய் என்று கேட்கிறது. எனக்கு எந்தக் கெடுதலும் செய்யவில்லை. ஆனாலும் எனக்கு உணவு வேண்டுமே? அதற்காகத்தான் உன்னை விழுங்கப் பார்க்கிறேன் என்கிறது பெரிய மீன். ஆனாலும் இது என்ன நியாயம் என்று வாதம் புரிகிறது சின்ன மீன். அதற்குப் பெரிய மீன், நிதானமாகச் சொன்ன விடைதான், இன்றும் ஒரு பெரும் தத்துவ மாகப் போற்றப்படுகிறது. இதோ பார், வெறுமனே பேசிக்கொண்டிருப்பதில் எந்தப் பயனும் இல்லை. உனக்கு இரண்டே வழிகள்தான் உள்ளன. உன்னை நீ காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்றால் எப்படியாவது இந்த இடத்தில் இருந்து தப்பித்து ஓடிவிடு. இல்லையானால் என்னை விழுங்கிவிடு. இரண்டையும் விட்டுவிட்டு பேசிக்கொண்டிருக்காதே என்பதுதான் அது சொன்ன விடை. உயிர் வாழ்தலுக்கான போராட்டம் எல்லா உயிரினங் களிடத்தும் நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது. ஓடு அல்லது எதிர்த்துப் போராடு என்பதே இயற்கையின் கட்டளை.

*தனக்குரியதை விட்டுக்கொடுக்காமல் மற்றவர்களிடம் தியாகத்தை எதிர்பார்ப்பது முட்டாள்தனம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டலினி யோகம்

– திரு கு. சிவபாலராஜா அவர்கள் –

நம் உடலிலுள்ள குண்டலினி சக்தியை "மூலக்கனல்" எனவும் குறித்துள்ளார்கள். கனல் என்பது தீயைக் குறிப்பது. அத் தீயானது உடல் மூலத்தில் (அடிப்பகுதி) அமைந்திருப்பதால் அது மூலத்தீ எனும் பெயர் பெறுகிறது. குண்டலினி சக்தியைப்பற்றி சிறப்பாகப் பேசியவர்கள் வரிசையில் சிவவாக்கியர், திருமூலர், அகத்தியர், ஔவையார் போன்றவர்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார்கள். குண்டலினி சக்தியை மேலேந்தும் யோகம் சிறந்த யோகம் எனப்பட்டுள்ளது. குண்டலினி சக்தியைப்பற்றி விளக்கமாகக் கூறிச்சென்றவர்கள் சித்தர்கள் ஆவர். சித்தர்கள் எனப்படுவோர் தமது தவ ஆற்றலால் சித்திகள் பெற்றவர்கள். ஞானிகளும் சித்தர்களும் தம்முள் கருத்துக்களால் ஒத்தவர்களாகவும் காணப்படுகின்றார்கள். "எண்ணியதை எண்ணியாங்கு எய்தும்" ஆற்றலுடையவர்கள் சித்தர்கள். அனைத்து சித்தர் களும் வலியுறுத்துவது ஞானமே. சித்தர்களை அவர்களின் எண்ணிக்கை கருதி ஒரு கோடி எனவும் கூறப்பட்டுள்ளது. பதினெண் சித்தர்கள் தொகையில் பதினெட்டுப் பெயர்களால் கூறப்பட்டுள்ளமை காணலாம். நந்தி, அகத்தியர், திருமூலர், புண்ணாக்கீசர், புலத்தியர், பூனைக்கண்ணர், இடைக்காடர், போகர், புலிக்கையீசர், கருவூரார், கொங்கணவர், காலாஞ்சி, அழுக்கண்ணர், அகப்பேயர், பாம்பாட்டி, தேரையர், குதம்பையர், சட்டைநாதர். சித்தர்கள் இளமையுடன் தோன்றக் காரணங்களாக இருப்பவற்றுள் முதலாகக் கூறப்படுவது குண்டலினி யோக சாதனையே. இச் சாதனையை அவர்கள் செய்வதால் அவர்களின் உடல், உள்ளம், ஆன்மா மூன்றும் பண்பட்டு அவர்களது முகத்தில் தேஜஸ், பொலிவு, உடல் திண்மை உண்டாகிறது.

குண்டலினி சக்தி என்றால் என்ன? என்பதை நோக்குவோம். இது நமது உடலில் உள்ள அற்புதமான ஆதார சக்தியாகும். இதை ஜீவ சக்தி எனவும் அழைக்கின்றோம். "தூங்கிக்கொண்டிருக்கும் தெய்வீக ஆற்றல்" இதுவாகும். பிறப்பிலிருந்து இறப்புவரை இது மனிதனில் இருக்கும் இச் சக்தி விழித்தெழுந்து ஆறாதாரங்களைக் கடந்து சகஸ்சாரத்தை அடையும் செயற்பாட்டினையே "குண்டலினி யோகம்" என்கிறோம். இச் சக்தியை "பாம்பு சக்தி" எனவும், ஆதார சக்தி எனவும் கூறுவர். இது நாகபாம்பு வடிவத்தில் உடல் மூலாதாரத் தில் தலைகீழாக உறங்கிக் கொண்டிருக்கும் சக்தியாகும். மனிதனின் பேராற்றலை இச் சக்தி விழிக்கச் செய்யும். அதன் பயன்களையே மனிதன் அனுபவிக்கின்றான். அதாவது ஒரு மனிதனை யோகியாகவும், ஞானியாக, சித்தராக, அறிவியல் அறிஞராக மற்றும் பல்வேறு துறைசார் நிபுணராக உயர்த்தி சிறப்புடன் விளங்க இச் சக்தியின் விழிப்பு நிலை உதவுகிறது. இச் சக்தி விழித்தெழாத நிலையில் மனிதன் அறிவிலி ஆகின்றான். அதனால் இவ்விடயத்தில் அக்கறை எடுத்தல் வேண்டும். இச் சக்தியானது பிராணனுடன் கூடி, பிராணவாயு என்னும் வாகனத்தை இடமாகக் கொண்டு சுழுமுனை வழியே ஆறாதாரங்களையும் தரிசித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றினைத் தாண்டி மேலேறிச் சென்று, விசுத்திவரை சென்று அதற்கப்பால், நாயகியாகிய குண்டலினி சக்தி (பெண்) தனது நாயகனான பிராணனை வழியனுப்பிவிட்டு தான் திரும்பவும் முன்னைய இடத்தினை அடைந்து உறக்கத்தில் ஈடுபடும். பிராணன் விசுத்தியைக் கடந்து மேற்சென்று ஆஞ்ஞை வழி சகஸ்ராரத்தையடைந்து இறையுலகம் சேரும் என்பது திருமூலர் திருமந்திர விளக்கமாகும். குண்டலினியும் பிராணனும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியும் நாள், யோக வாழ்வில் மிக முக்கியமாகும் என்பதை திருமூலர் பின்வருமாறு குறிப்பிட்டு அருளிச் செய்தமை காணலாம்.

சோதனை தன்னில் துரிசறக் காணலாம்
நாதனும் நாயகி தன்னிற் பிரியுநாள்
சாதன மாகுங் குருவை வழிபட்டு
மாதன மாக மதித்துக் கொள் ளீரே.

-திருமந்திரம் 721.

குண்டலினிசக்தி நம் உடம்பில் விளங்கும் அம்மன் சக்தியை அதாவது பரமேஸ்வரி யைக் குறிக்கும். பிராணவாயுவைக் கட்டுப்படுத்தினால் குண்டலினி சக்தி விழிப்படைய வழியேற்படும். இதனால் சித்திகள் பெறலாம். பல சித்தாடல்கள் செய்யலாம். முக்திப் பேற்றுக்கான வழி திறக்கப்படும். உடலில் விளங்கும் பிராணன் என்னும் உயிர்ச்சக்தி மேலேற முடியாமல் குண்டலினி சக்தியால் கட்டுப்படுத்தப்படுகிறது. அதனால் பிராணனானது குண்டலினி சக்தியின் "கைதி" எனவும்படுகிறது. குண்டலினி சக்தி விழிப்படைவதால் யோக பலன்களாகிய சித்திகளைப் பெறலாம். அவைதான் அட்டமா சித்திகள் எனப்படும். அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பனவாகும். "குண்டலினி சக்தியானது மணிபூரக சக்கரத்தைக் கடந்து சென்ற பின்னர்தான் மூவாசைகள் ஒழிந்து, நல்லெண்ணங்கள் பெரிய நோக்கங்கள் என்பன மனிதனுக்குக் கிடைக்கின்றன" என்பது ஸ்ரீ இராமகிருஸ்ண பரமஹம்சர் கருத்தாகும். மேலும், "ஆன்ம விழிப்புக்கு குண்டலினி சக்தியின் விழிப்பு தேவை என்றுள்ளார். குண்டலினி மணிபூரகச் சக்கரம் உட்பட்டு நிற்குமிடத்து மனிதன் உணவு, காமம், தூக்கம் போன்ற உணர்வுகளில் ஆழ்ந்து கிடக்கிறான் எனவும் பரமஹம்சர் குறிப்பிட்டுள்ளார்.

---

ஒரு நேரத்தில் ஒன்றை மட்டும் சொல்லித் தந்த குருநாதர்மேல் சீடனுக்குக் கோபம். தன் நேரம் விரைவதாய் வருந்தினான். அவனுக்கு விசயங்களைப் புரியவைக்க நினைத்த குரு கூண்டில் அடைக்கப்பட்ட பத்து கோழிகளையும் திறந்துவிடச் சொன்னார். சீடன் திறந்துவிட்டான். இப்போது திறந்துவிட்ட பத்து கோழிகளையும் பிடிக்கச் சொன்னார். பத்தும் பத்துத் திசையில் ஓடின. அவைகளைத் துரத்தித் துரத்திக் களைத்தான் சீடன். இப்பொழுது கழுத்தில் சிகப்பு நாடா கட்டப்பட்ட கோழியை மட்டும் பிடிக்கச் சொன்னார் குருநாதர். இப்போது அந்த ஒரு கோழியை மட்டும் குறி வைத்துத் துரத்தினான். சில நிமிடங்களிலேயே பிடித்தும் விட்டான். குருநாதர் கூறினார், ஒரு நேரத்தில் ஒன்றை மட்டும் பின்பற்று. பலவற்றையும் பிடிக்க நினைத்தால் எல்லாவற்றையும் இழந்து நிற்பாய். அதாவது ஒரு நேரத்தில் ஒன்றை மட்டும் கற்றுக்கொள்வது சிறந்ததாக இருக்கும் என்பதை குரு சீடனுக்கு உணர்த்துகிறார்.

*ஆசைதீரக் கொடுப்பது இயலாத காரியம். ஆசையும் நன்றியும் முரண்பட்ட பண்புகள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தில்லைக் கூத்தனின் ஆடல் காண வாரீர் (தொடர்ச்சி...)

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன் அவர்கள் –

## திருநாளைப் போவார்

இறைவனுக்குத் தொண்டு செய்வதையே தமது வாழ்வின் சிறப்புச் செயலாகக் கொண்டவர்கள் திருத்தொண்டர்கள். இவர்களுக்கும் இறைவனுக்கும் பேதமில்லை. கண்கண்ட தெய்வங்களாகிய சிவனடியார்களில் ஒருவர் நந்தனார். இவருக்கு திருப்புன்கூர் இறைவனின் தரிசனம் கிடைத்ததும் ஆடினார், பாடினார், ஆனந்தங்கொண்டார். இறைவனைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றுவிட்டேன் என்று பெருமிதங் கொண்டார். எனக்கு இரங்கிய இறைவனுக்குத் தான் ஒரு தொண்டு செய்யவேண்டும் என்ற ஆசையால் ஆண்டவன் திருப்பணிக்குத் தடையின்றித் தண்ணீர் கிடைக்கவேண்டுமென ஒரு குளம் வெட்டி முடித்துப் பின் கோயிலைச் சுற்றி வலம் வந்து ஆடிப்பாடி விடைபெற்றுத் தம்மூர் சென்றார்.

தில்லைக்குப் போகவேண்டுமென்ற ஆசை நாளுக்கு நாள் அதிகரித்தது. "தில்லை அம்பலத் தலமொன்றிருக்குதாம் அதைக் கண்டபேர்க்கு ஜனன மரண பிணியைக் கருக்குதாம்" என்ற செய்தியைக் கேட்டதும் அதே சிந்தனையாகிவிட்டது. அம்பலத்தில் ஆடும் நடராஜப் பெருமானின் ஆட்டம் காண நாட்டம் கொண்டார். துடித்தார். நித்திரையில்லாமல் தவித்தார் ஆவுரித்துத் தின்றுழலும் புலையர் குலத்தில் பிறந்துவிட்டேனே. அங்கு தூய்மையே உருவான தில்லைவாழ் அந்தணர்கள் மூவாயிரர் பூஜை செய்கிறார்களாமே. நான் எப்படிப் போவேன் என்று மனமுடைந்தார். ஆயினும் சிதம்பரம் செல்லவேண்டும் என்ற ஆசை கூடியதே தவிர குறையவில்லை. ஒவ்வொரு நாளும் நாளை நான் சிதம்பரம் போவேன் என உறுதிகொள்வார். இங்ஙனம் பல நாட்கள் கழிந்தன. எல்லோரிடமும் நாளை நான் சிதம்பரம் போவேன் என்று சொல்லி வந்தார். அதனால் "நாளைப் போவார்" எனப் பட்டம் சூட்டினர்.

அவர் வேலை செய்த அந்தணரிடம் உத்தரவு கேட்பார். ஒருநாள் அவரிடம் போய் நாளைக்கு நான் தில்லைச் சிதம்பரம் போக வேண்டும் என அனுமதி கேட்டார். அந்தணர் சீற்றத்துடன் எல்லா வயல் நிலங்களையும் உழுது நெல் விதைத்து அறுவடை செய்தபின்பு போய்வா என்றார். நந்தனாருக்கு கவலை மேலிட ஆனந்தக் கூத்தனைக் கண்டு சேவிக்க முடியவில்லையே என மனமுருகி இறைவனை நினைந்து அழுதுகொண்டு உறங்கிவிட்டார்.

எம்பெருமான் கருணை வள்ளலல்லவா? தன் பக்தன் படும் வேதனை கண்டு சும்மா இருப்பாரா? அன்றிரவே வயல்களெல்லாம் உழுது பயிரிட்டு, நெல்மணிகள் எல்லாம் விளைந்து குலுங்க திருவருள் பாலித்தார். நந்தனாரின் பக்தியின் மகிமையை உலகு அறியும்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிளையாடலைச் செய்தருளினார். மறுநாள் காலையில் வயலில் நெல்மணிகள் விளைந்ததைக் கண்டு நந்தனார் இறைவன் திருவருளை எண்ணி ஆடினார், பாடினார், தொழுதார். கண்ணீர் பெருக இறைவனை நினைந்து உருகினார். அந்தணரும் ஊர் மக்களும் நந்தனார்மேல் இறைவன் கொண்ட கருணையை எண்ணி வியந்தனர்.

திருநாளைப்போவாரின் கனவு நனவாகியது. தில்லைச் சிதம்பரம் வந்து சேர்ந்தார். எங்கு பார்த்தாலும் ஓம குண்டங்களும், வேத ஒலியும், அடியார் மடங்களும் "அரகர" என்ற ஓசை நிறைந்திருப்பதைக் கண்டு வெருண்டார். மிகவும் தூய்மையான இடத்தில் தூய்மை அற்ற நான் எங்ஙனம் போவேன் என்று சொல்லி வருந்தி இரவும் பகலும் ஓயாது தில்லையைச் சுற்றி வலம் வந்தார். உள்ளம் நொந்து உடல் சோர்ந்து சற்றே உறங்கினார். இறைவனே கனவில் வந்து தன்னை அடைய அலையும் பக்தரை தேற்றினார். "தில்லை மூவாயிரவரைத் தீ வளர்க்கப் பணித்துள்ளேன். அதில் மூழ்கி எழுந்தாற் புதிய வடிவம் பெறுவாய். அத்துடன் நம்மை வந்தடைவாய்" என அன்புமொழி பகர்ந்தார்.

பாரறிய மனைவிக்குப் பாதியுடலீந்த பரமன், தியாகராஜன் கருணைக் கடல் தமது பக்தனின் துயரம்கண்டு சும்மா இருப்பாரா? தில்லை மூவாயிரவர்க்கு மொருகனவு தோன்றியது. "நமது பக்தன் ஒருவன் ஊருக்கு வெளியே படுத்திருக்கின்றான். நந்தன் என்ற பெயரினன். அவன் மூழ்கத் தீ வளர்ப்பீர். அவனை நம்மிடம் அழைத்து வருவீர்" என்று நடராஜப் பெருமான் கட்டளை பிறப்பித்தார். திடுக்குற்று விழித்த தில்லைவாழ் அந்தணர்கள் இறைவனது பக்தராம் அவர் எங்கே என்று தேடிக் கண்டு அவர் காலடியில் வீழ்ந்து வணங்கி இறைவன் ஆணையைக் கூறினர். தெற்குக் கோபுர வாயிலில் தீ வளர்த்தனர். அதில் நந்தனார் மூழ்கினார். முப்புரி தரித்த முனிவர் உருவில் சடைமுடியுடன் தீக்கொழுந்துபோல் வெளியே வந்தார். கடல்போல் திரண்டிருந்த அடியார்கள் கைகூப்பித் தொழுதனர். அன்புப்பிழம்பாகக் காட்சியளித்த திருநாளைப்போவார் ஆண்டவனைக் காணும் ஆர்வம் நிறைந்தவராய் தெற்குக் கோபுர வாயில் வழியே நடராஜர் ஆடும் அம்பலத்து எல்லையை அடைந்தார். "உள்ளே புகுந்தார், நடமாடும் எல்லையிலே தலைப்பட்டார். யாவரும் கண்டிலர்" என்று பெரியபுராணத்தில் சேக்கிழார் பாடினார். இந்தக் காட்சியைக் கண்டதில்லை மூவாயிரவர் அதிசயித்தனர். அடியார்கள் துதி செய்தனர். சுந்தரர்; "செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்" என்று திருத்தொண்டத்தொகையிலே பெருமை தோன்றக் கூறுகிறார்.

நாயன்மார்கள் எல்லா சமூகத்திலிருந்தும், ஆண்டான் அடிமை (நந்தனார் காலம்) களிலிருந்தும் எந்த வேறுபாடுமில்லாமல் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். நந்தனாருக்கு தில்லையிலே தனிக்கோவிலுண்டு. எம்பெருமான் பக்தி வலையில் படுவோன்.

கைவிட மாட்டா னென்றுதாது சங்கே
கனக சபையா னென்றுதாது சங்கே
பொய் விடச் செய்தா னென்றுதாது சங்கே
பொன்னம் பலத்தான் என்றுதாது சங்கே.

"நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ வைகுண்டத்தில் சண்முகசிகாமணிக் கவிராயருக்கும் சிவகாமி அம்மைக்கும் திருச்செந்தூர் செந்தில்வேலன் அருளால் பிறந்தவர் குமரகுருபர சுவாமிகள். ஐந்து வயது நிரம்பியும் குழந்தை பேசாதிருந்தது. பெற்றோர்கள் தவித்தனர். திருச்செந்தூர் முருகனிடம் போய் தங்கள் குறையைச் சொல்லி அழுது புலம்பி முருகன் சந்நிதியே கதியென்று கிடந்தனர். முருகன் அருளால் இலை விபூதி பிரசாதம் பெற்று, அவனருளால் பேசும் ஆற்றலுடன், பாடல் புனையும் திறனும் பெற்றார் குமரகுருபரர். "குமரகுருபரனே! விழித்தெழுக!" அஞ்ஞான இருள்நீக்கி மெய்ஞான விழிப்பு நல்கும் அருட்குமரன், பாலகனைத் தொட்டதுமே மெய்விதிர்த்து எழுந்தான். குமரனின் கொவ்வைச் செவ்விதழ் குறுஞ்சிரிப்பினைக் கண்டு தானும் இளநகை பூத்தான். மயக்கங்களைத் தீர்க்க வந்த மால் மருகன் பாலகனை நோக்கி "வாய் திறந்து காட்டு" என்றதும் வாய் திறந்தான். நாவினிலே ஆறெழுத்து மந்திரத்தை வேலால் எழுதியருளினார். அக்கணமே ஞானமும் கல்வியும் பாலனை நாடி வந்தன. "தந்தையே, தாயே" என்று பாலகன் குரல் கொடுத்ததும் குமரப்பெருமான் மறைந் தருளினார். தாய் தந்தையர் முருகப்பெருமான் சந்நிதிக்குச் சென்று பன்னிரு விழிகளும் இவர்மீது கருணையைப் பொழிந்தன என்று ஆனந்தக் கண்ணீர் பெருக்கி முருகனைப் போற்றித் துதித்து வணங்கினர். அப்போது சந்நிதியில் அமர்ந்திருந்த பாலகன் "பூமேவு செங்கமலப் புத்தேவரும்" என்று அற்புதக் குரலிலே ஆறுமுகப்பெருமானை நோக்கி "கந்தர் கலிவெண்பா" பாடினார். பக்தி மேலிட அநேக பாடல்களைப் பாடி, முருகப்பெருமானோடு பேசி, பல தலங்களுக்கும் சென்று தீந்தமிழிலே பக்திச்சுவை சொட்டச் சொட்டப் பாடினார்.

பின்பு ஞானாசாரியாரின் உபதேசம் பெற்று சிதம்பரம் சென்றார். ஆடல்நாயகன், தில்லைக்கூத்தனைத் தரிசித்து, எம்பெருமான் அருள்பெற்று "சிதம்பரம் மும்மணிக்கோவை, இரட்டை மணிமாலை" முதலிய நூல்களைப் பாடியருளினார். சரஸ்வதிதேவியின் அருள்பெற்று "கனகதாரா ஸ்தோத்திரம்" பாடி தங்க நெல்லிக்கனிகளை மழைபோல் பொழிவித்தார் ஆதிசங்கரர். மதுரை அங்கயற்கண்ணியின் அருளால் "மீனாட்சி பிள்ளைத்தமிழை" அரங்கேற்றம் செய்து, மீனாட்சியே அதனைக் கேட்டு ரசித்து தன் கழுத்தில் இருந்த முத்தாரத்தைக் கழற்றி குமரகுருபரருக்கு வழங்கி அருள்பாலித்தாள். அப்படியே எத்தனையோ அருளாளர்கள் அம்மையப்பனின் அருள் பெற்றிருக்கிறார்கள். எல்லாம் சிவன் செயல்.

சிவனவன் என் சிந்தையில் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்

ஓம் நமசிவாய சிவாயநம ஓம்

(தொடரும்...

---

*எவராவது உங்களுக்குத் தீங்கிழைத்தால் நீங்களும் அவர்களுக்குத் தீங்கிழைக் கக்கூடாது. அவர்கள் அடிப்படையில் எவ்வளவு பலவீனமானவர்கள் என்பதையும், தங்களது தவறை ஏற்றுக்கொள்ளத் திராணி இல்லாத காரணத்தினாலேயே அவற்றைப் பிறர்மீதான தாக்குதல்களாக மாற்றிக்கொள்கிறார்கள் என்பதையும் அறிந்து உங்களின் மனதைப் பக்குவப்படுத்திக்கொள்ளுங்கள்.*

*வரவு இல்லாமல் செலவை வரவழைத்துக்கொள்பவர்கள் யோக்கியர்களாக இருத்தல் அரிது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை எவ்வாறு அமைய வேண்டும்

– *திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு* அவர்கள் –

இனிய இக் காலைப் பொழுதினிலே பிரார்த்தனை பற்றி இன்றைய சிந்தனைக்கு எடுத்துக்கொள்வோம். பிரார்த்தனை என்றால் என்ன என்று சிந்திப்போமாயின் மனதில் எழு கின்ற ஒவ்வொரு விருப்பமும், மலராத ஒரு பிரார்த்தனையே ஆகும்.

விருப்பம், தேவை இவ்விரண்டும் இல்லாத மனிதனே இல்லை. எனவே பிரார்த்தனை செய்யாதவர்களும் இல்லை என்றே கூறலாம். எமது விருப்பங்களும் ஆசைகளும் தேவைகளும் இறைவனிடம் சமர்ப்பிக்கப்படும்போதுதான் அவை "பிரார்த்தனை" என்னும் பெயரைப் பெறு கின்றன.

அப்படியானால், தெய்வ சந்நிதியில் நின்றுகொண்டு இறைவனை நோக்கி எனக்கு இது வேண்டும்; அது வேண்டும் என சொல்லிவிட்டால் அது பிரார்த்தனை ஆகிவிடுமோ என்று தோன்றலாம். இது சிந்திக்க வேண்டிய விஷயம் இல்லையா?

பிரார்த்தனை எதற்கு? தேவைகளை நிறைவேற்றியாகப் பிரார்த்தனை. மனிதனின் தேவைகள் இரண்டு வகையானவை.

ஒன்று, அன்றாட வாழ்க்கைக்கான தேவைகள். பணம் வேண்டும், நோய் குணமாக வேண்டும், புத்திர பாக்கியம் வேண்டும், திருமணம் நடைபெற வேண்டும், வழக்கில் இருந்து வெற்றிபெற வேண்டும், தேர்தலில் வெற்றிபெற வேண்டும் இவ்வண்ணம் மனிதனது தேவைகளும் ஆசைகளும் சொல்லப்போனால் கொஞ்சநஞ்சமல்ல. இவற்றிற்காக இறைவனை வேண்டுதல் ஒருவகைப் பிரார்த்தனை.

இத்தனை தேவைகளையும் இறைவன் பூர்த்திசெய்து விட்டார் என்று வைத்துக் கொள்வோம். மனிதன் வாழ்வில் நிம்மதி கிடைத்துவிடும் என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை. ஒரு ஆசை நிறைவேறியதும் நூறு ஆசைகள் புதிது புதிதாய்த் தோன்றும். அவை சங்கிலித் தொடர்போல் தொடரும்.

இவ்வாறு ஆசைகள் நிறைவேறிக்கொண்டுவர, புறப்பொருள்களால், வாழ்வின் சுக போகங்களால், நிம்மதியைப்பெற முடியாது என்ற ஒரு ஞான ஒளிக்கீற்று எமக்குப் புலப்படும் நிலை ஏற்படும். இது, எமக்கு இன்பமான சந்தோஷத்தை வழங்காது என்றதோர் உண்மை யினை எமக்கு புரியவைக்கும்.

இதன் பின்தான், இந்த உலகம்தான் எமக்கு எல்லாமா? அல்லது இதற்கு மேலும் ஏதாவது உள்ளதா? என்ற வினா எமக்குள் எழும். இதற்கு நாம் விடை தேடியாக வேண்டும்.

*எந்த ஒரு செயலுக்கும் பயன் என்ன என்று அளந்தறிதல் ஒழுக்கத்தினை வளர்க்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுதான் எமது இரண்டாவது தேவை எனலாம். இந்நிலையில் ஒருவன் எவ்வண்ணம் தனது பிரார்த்தனையைச் செய்கின்றான் என்று பாருங்கள். இறைவா! நான் உண்மையை உணரவேண்டும். அதற்கான இறைத்தூய்மை வேண்டும், பக்தி வேண்டும், ஞானம் வேண்டும், நின்மேல் திருக்காட்சி தரிசனம் வேண்டும் என்றெல்லாம் இறைவனை வேண்ட ஆரம்பிப்பான். இதுவே ஆன்மீகப் பிரார்த்தனை ஆகின்றது.

நம்பிக்கையோடு பிரார்த்தனை செய்தால்போதும். சில வேளைகளில் எமது வேண்டுதல்கள் நிறைவேற்றப்படுவதில்லை என்பதை யாம் காண்கின்றோம். இது சிலவேளைகளில்தான்.

காரணம், நாம் தனி நபர் அல்ல. எம் ஒருவருக்காக மட்டும் இவ்வுலகம் இயங்கவில்லை. எமது வாழ்க்கை எமது குடும்பம், நண்பர், உறவினர், அலுவலகம், சமுதாயம் எனப் பலரது வாழ்வோடு எமது வாழ்வும் பின்னிக் கிடக்கின்றது. எமது சில கோரிக்கைகளுக்கு உடனே நிறைவேறும் வாய்ப்பு சில தருணங்களில் ஏற்படாது.

உதாரணத்திற்குப் பாருங்கள். காலையில் உழவன் வயலுக்குப் புறப்படும்போது, அரச மரத்தடி விநாயகரிடம் இன்றாவது மழை பெய்ய வேண்டும். அப்பனே பயிர் விளைந்து என் பஞ்சமெல்லாம் தீர வேண்டும் என்று வேண்டிக்கொள்கின்றான்.

இதே நேரம் நீண்ட நாட்களின் பின்னர் இன்றுதான் எனக்கு ஒரு கச்சேரிக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. இறைவா இன்றுமட்டும் மழை பெய்யாது பார்த்துக்கொள். என் குடும்பத்தின் பசி தீரவேண்டும் என்று இறையை வேண்டிக்கொள்கின்றான் ஒரு பாடகன். இவற்றுள் ஒருவரின் பிரார்த்தனை நிறைவேறினால் மற்றவர் பாடு திண்டாட்டம்தான்.

இவற்றைவிட, நோய் தீரவேண்டும், செல்வம் வேண்டும் என்ற பிரார்த்தனைகள் தனிப்பட்ட சொந்தப் பிரார்த்தனைகள். இவைகூட முற்றாக நிறைவேற வாய்ப்பில்லை. காரணம் எமது முன் வினைகள் எம் பிரார்த்தனைகளின் பின்னணியில் உள்ளன. இதனால், எமது சில பிரார்த்தனைகள் நிறைவேறும், சில நிறைவேறா.

வினைகளின் போக்கு மிக ஆழமானது என்கின்றது கீதை. எனவே, இந்த உண்மையை நாம் உணர்ந்தாக வேண்டும். தீவிரமாக இதை உணர்ந்து செயற்பட்டால் எமக்கு இறை அருள் கைகூட இடமுண்டு. இறையைப் புரிந்துகொள்ளவும் வாய்ப்புண்டு. எனவே எமது பிரார்த்தனையின் பின்னணியில் அடக்கம், மனத்தூய்மை, மனத்தெளிவு, பக்தி ஆகியவை வேண்டும். இவையே ஆன்மீகத்தின் முதற்படி.

---

*இறைவனை நெருங்கிவிட்ட ஞானிக்கு அரசனும் துரும்பாகி விடுகிறான். கனபரிமாணத்தில் அளவிடமுடியாத ஆலமரத்தைக் கண்ணுக்குத் தெரியாத காற்று சாய்த்துவிடுகிறது. துறவிக்கு வேந்தன் துரும்பு. சொத்து சுகங்களில் எவனுக்குப் பற்று இல்லையோ அவனுக்கு எல்லாமே துச்சம். நான் எனும் ஆணவம் போகிக்கு வரும். யோகிக்கு வராது. எல்லாவற்றையும் கடந்த நிலை ஞானியின் நிலை. என்னுடையது என்று சொல்லிக்கொள்ள இறைவனைத் தவிர பிரபஞ்சத்தில் எவருக்கும் எதுவுமேயில்லை.*

***ஒன்றுமே இல்லாதிருப்பவர்கள் ஒன்று கிடைத்தவுடன் மன அமைதி பெறுவார்கள்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 100000. 00 |
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| செ. கவிதா | லண்டன் (வல்வெட்டி) | 15000. 00 |
| சி. லக்ஷ்மன் | பருத்தித்துறை | 10000. 00 |
| திரு குமார் | கனடா | 1050000. 00 |
| டனாஸ் | லண்டன் | 15000. 00 |
| சுசீலா நகை மாடம் | பருத்தித்துறை | தேங்காய், 1மூடை அரிசி |
| சி. தங்கவடிவேல் (சிற்றி வெதுப்பகம்) | தும்பளை | 1மூடை மா |
| சுந்தரம் மருந்தகம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| வ. ரயுலாதேவி | கந்தர்மடம் | 5000. 00 |
| நா. கந்தப்பு | தோப்பு | 15000. 00 |
| இந்திரா குடும்பம் | லண்டன் | 10000. 00 |
| திரு ஜெயக்குமார் குடும்பம் | லண்டன் | 15000. 00 |
| திரு கனகசுந்தரம் குடும்பம் | லண்டன் | 10000. 00 |
| செல்வமனோகரன் பிறேமாவதி | லண்டன் | 37300. 00 |
| தோமஸ் னோடெல், கௌசலா சாந்தகுமார் | ஜேர்மன் | 50000. 00 |
| செ. ரேணுகாசன் | புலோலி | 100000. 00 |
| மே. நிரோத்தீபன் | அரியாலை | 7000. 00 |
| K. கருணாகரன் | வல்வெட்டி | 25000. 00 |
| N.R. சின்னராசா குடும்பம் | இணுவில் | 10000. 00 |
| த. அனோகரன் | கோப்பாய் | 1மூடை அரிசி |
| ட. கலா | நீர்வேலி | 10000. 00 |
| வ. ஆறுமுகம் | ஆவரங்கால் | 10000. 00 |
| வ. கணபதிப்பிள்ளை | கொழும்பு | 5000. 00 |
| திருமதி சறோஜினிதேவி தில்லைநாதன் | ஆவரங்கால் | 10000. 00 |
| திருமதி பாலகௌரி சோதிநாதன் | கனடா | 10000. 00 |
| திருமதி பாஸ்கரதேவி நரேந்திரன் | கனடா | 10000. 00 |
| திருமதி யோகராணி நடராஜா | கனடா | 25000. 00 |
| ப. புனிதவதி | மல்லாகம் | 2000. 00 |

*வேலை செய்யும் விருப்பமே தேவை. விருப்பம் வந்துவிட்டால் வேலை கிடைத்துவிடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| க. கவின் | லண்டன் | | 1000. 00 |
| மா. பிரியா | அளவெட்டி | | 5000. 00 |
| ச. பிரதீபன் | தொண்டைமானாறு | | 20000. 00 |
| திரு கஜேந்திரன் குடும்பம் | இணுவில் | | 30000. 00 |
| த. மிதுஸ் | பொலிகண்டி | | 30 பவுண்ஸ் |
| ர. சியாமளா | மானிப்பாய் | | 15000. 00 |
| இளையதம்பி ஐங்கரன் | பலாலி | | 10000. 00 |
| கே. கிருஸ்ணானந்தி | திருநெல்வேலி | | 5000. 00 |
| க. சசிகரன் | வல்வெட்டி | | 5000. 00 |
| க. கருணாகரன் | வல்வெட்டி | | 5000. 00 |
| பி. விஸ்வந் | கோண்டாவில் | | 4000. 00 |
| இ. ராஜ்குமார் | லண்டன் | | 5000. 00 |
| ந. சிவராசா | கோண்டாவில் | | 2000. 00 |
| ந. சுதாகர் | பிரான்ஸ் | | 5000. 00 |
| வை. கருணா | நவக்கிரி | | 10000. 00 |
| ஸ்ரீ. விசாகன் | சங்கானை | | 5000. 00 |
| திரு தில்லைநாதன் குடும்பம் | சுவிஸ்லான்ட் | | 30000. 00 |
| திரு திருமாறன் குடும்பம் | நெல்லியடி | | 10000. 00 |
| திரு யோகேஸ்வரன் குடும்பம் | சங்கானை | | 10000. 00 |
| திரு ஸ்ரீதரன் குடும்பம் | சங்கானை | | 10000. 00 |
| திரு ஜெயராசா குடும்பம், ஜெ. ஜோசான் | சங்கானை | | 20000. 00 |
| ஜெ. ஜெசிக்கா | லண்டன் | | 10000. 00 |
| ஜெ. மதுஷின் | லண்டன் | | 5000. 00 |
| ஜெ. உஷா | வல்வெட்டி | | 10000. 00 |
| வை. குருமூர்த்தி | கொக்குவில் | | 15000. 00 |
| திரு ரவீந்திரன் குடும்பம் | இமையாணன் | 1புட்டி அரிசி | 10000. 00 |
| இ. நிலவன் | கனடா | | 10000. 00 |
| ஜெ. நிலவன், ஜெ. ஆதவன் | குப்பிளான் | | 10000. 00 |
| க. விமலாவதி | கனடா | | 10000. 00 |
| திரு கருணபாஸ்கரன் குடும்பம் | கனடா | | 5000. 00 |
| சு. சுரேஸ்குமார் | நோர்வே | | 1000. 00 |
| வா. வரதராஜன் | சண்டிலிப்பாய் | | 10000. 00 |
| க. மனோகரன் | சண்டிலிப்பாய் (சுவிஸ்) | | 10000. 00 |
| க. ஜெயக்குமார் | சண்டிலிப்பாய் | | 10000. 00 |
| த. நிதிவண்ணன், நி. ஆருஷன் | அச்சுவேலி | | 10000. 00 |
| திரு தயாளதாஸ் குடும்பம் | கனடா | | 100000. 00 |
| திரு குமாரமுரளி குடும்பம் | கனடா | | 10000. 00 |

*கடவுள் சோதனைக்குத் துன்பத்தைத் தருவான் என்பதும் சரண்டல் வர்க்கத்தின் தத்துவமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நா. மதனகுமார் | திருகோணமலை | 3000. 00 |
| Dr V. பாலகிருஸ்ணன் குடும்பம் | வதிரி | 5000. 00 |
| திரு ஸ்ரீஸ்கந்தராஜா குடும்பம் | அல்வாய் | 70கிலோ அரிசி |
| மெ. திலீபன் | ஏழாலை | 10000. 00 |
| S. பரமேஸ்வரன் | லண்டன் | 15000. 00 |
| S. சுகுமார் | (கனடா) மல்லாகம் | 10000. 00 |
| K. அஸ்வின் | கோண்டாவில் | 5000. 00 |
| திரு புலேந்திரலிங்கம் குடும்பம் | சாவகச்சேரி | 6000. 00 |
| சி. சசிதரன் | பிரான்ஸ் | 10000. 00 |
| சி. அன்புமலர் | வட்டுக்கோட்டை | 6000. 00 |
| சி. அசிதன் | வட்டுக்கோட்டை | 6000. 00 |
| சிவலிங்கம் சிவபாக்கியம் | அவுஸ்திரேலியா | 85200. 00 |
| கணேசலிங்கம் பிறேமா | அவுஸ்திரேலியா | 10650. 00 |
| ச. ரட்ணராஜா | அச்சுவேலி | 5000. 00 |
| T. ஸ்ரீபாலன் | மாவிட்டபுரம் | 5000. 00 |
| அ. வனஜா | ஜேர்மன் | 10000. 00 |
| J. சந்திரப்பிரகாசம் | பருத்தித்துறை | 15000. 00 |
| ச. சாந்துஜன் | சுவிஸ் (முதியோர்களுக்காக) | 25000. 00 |
| கு. கருணாவதி | சுவிஸ் (முதியோர்களுக்காக) | 15000. 00 |
| சி. பத்மநாதன் குடும்பம் (இளை. ம.வங்கி) | யாழ்ப்பாணம் | 100000. 00 |
| P.M. ராசரத்தினம் குடும்பம் | தாவடி | 2000. 00 |
| சு. நிமலன் | அவுஸ்திரேலியா | 2000. 00 |
| பொ. முகுந்தன் | சாவகச்சேரி | 5000. 00 |
| கு. அஸ்வின், S.K. குலசிங்கம் | கனடா | 15000. 00 |
| வி. சிவதர்சினி | கைதடி | 5000. 00 |
| கி. பவானி | கைதடி | 2000. 00 |
| தீ. தவநந்தினி | கைதடி | 1000. 00 |
| S. கிருஷ்ணகுமார் | கைதடி | 2000. 00 |
| ஸ்ரீதரன் சுபேதா குடும்பம் | சுவிஸ் | 5000. 00 |
| ந. கேதா குடும்பம் | லண்டன் | 5000. 00 |
| து. சிவராஜா | பிரான்ஸ் | 10000. 00 |
| சி. ஜனன் | லண்டன் | 5000. 00 |
| தி. கெங்கேஸ்வரன் | கனடா | 5000. 00 |
| ந. கஜன் | நாச்சிமார் கோவிலடி | 500. 00 |
| S. சுந்தரலிங்கம் | சரசாலை | 6000. 00 |
| ச. விதேஸ் | சிலாபம் | 1500. 00 |
| சி. கமலராணி | இலக்கணாவத்தை | 2000. 00 |
| க. பாலமுருகன் | இணுவில் | 30000. 00 |

*தமிழ் ஒரு மொழி மட்டுமல்ல. தமிழே ஒரு நாகரிகமாகவும் சமயமாகவும் வளர்ந்துள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| R. அக்ஷரா | ஊரெழு | 5000. 00 |
| R. குகதாஸ் | ஊரெழு | 5000. 00 |
| பொ. வாமதேவன் | மல்லாகம் | 5000. 00 |
| சு. வேலுப்பிள்ளை | கொழும்பு | 10000. 00 |
| ச. ஜனகன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| ச. கிருபன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| திரு சிவஞானசூரியர் குடும்பம் | கொழும்பு | 10000. 00 |
| உமாகாந்தன் டிஜா | கனடா (கல்விப்பணி) | 10000. 00 |
| திரு அஜந்தகுமார் குடும்பம் | லண்டன் | 25000. 00 |
| A. ரவி | சுழிபுரம் | 5000. 00 |
| கோ. கிஷோ | உடுவில் | மரக்கறி, 2புட்டி அரிசி |
| N. பஞ்சசீலன் | அச்சுவேலி | 5000. 00 |
| ப. நிந்துகேஷன் | வவுனியா | 5000. 00 |
| T. அக்ஷரா | திருநெல்வேலி | 5000. 00 |
| கு. ஈஸ்வரகுமார் | நீர்வேலி | 10000. 00 |
| க. தர்மலிங்கம் J.P | நீர்வேலி | 40000. 00 |
| ரதி மகேந்திரன் | மயிலியதனை | 5000. 00 |
| N. நவீந்திரன் | பாலநகர் | 1000. 00 |
| ந. செல்வரஞ்சன் | சாவகச்சேரி | 5000. 00 |
| திரு தர்மராஜா குடும்பம், திரு வேலவன் குடும்பம் இணுவில் | | 5000. 00 |
| S. சிவலிங்கம் | சங்கானை | 5000. 00 |
| S. வேலவன் | பிரான்ஸ் | 5000. 00 |
| க. பரமேஸ்வரி | பத்தமேனி | 5000. 00 |
| இ. சௌந்தரநாயகம் | லண்டன் | 15000. 00 |
| S. செந்தூரன் | குப்பிளான் | 5000. 00 |
| குலத்துங்கம் வில்வராசா மூலம், சண்முகநாதன் ராஜகுமார் நோர்வே | | 500350. 00 |
| க. விவேகானந்தம் | உடுப்பிட்டி | 20000. 00 |
| க. கணேசரூபன் | மூத்தவிநாயகர் கோவிலடி | 5000. 00 |
| K. சாந்தன் | கொக்குவில் | 10000. 00 |
| ஸ்ரீ. மாலவன் | உடுப்பிட்டி | 20000. 00 |
| திரு கிருபாவேந்தன் குடும்பம் | மாலிசந்தி | 5000. 00 |
| சி. சச்சிதானந்தம் | பிரான்ஸ் | 5000. 00 |
| சி. அசோக் | கம்பர்மலை | 10000. 00 |
| வீ. மகாலிங்கம் | அல்வாய் | 25000. 00 |
| கா. அனுஷா | பண்டத்தரிப்பு | 10000. 00 |
| ச. சண்முகசுந்தரம் | பண்டத்தரிப்பு | 10000. 00 |
| சு. திரிசா | லண்டன் | 5000. 00 |
| இ. சயந்தன் | நவுக்கிரி | 5000. 00 |

(தொடரும்...

*தங்கள் வாழ்க்கையை முறைப்படுத்திக்கொள்ள மறுப்பவர்கள் நல்லவர்கள் அல்லர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# உடலும் உள்ளமும்

– திரு இராம ஜெயபாலன் அவர்கள் –

## ஆற்றலும் அறிவும்

அறிவுக்கு அடிப்படையாகக் கல்வியையும் ஆற்றலுக்கு அடிப்படையாக கலைகளையும் குறிப்பிடலாம். இதனால் ஆற்றல் என்பது ஆழ்மனப் பதிவின் இயல்பூக்கம். உதாரணம் மனிதரல்லாத உயிரினங்கள் தொண்ணூறு வீதம் ஆற்றலால்தான் உயிர் வாழ்கின்றன. தவிர அவற்றின் ஆற்றல் பிறப்பினால் வருகின்றது. ஆனால் பத்துவீதம்தான் அவைக்கு மனிதர்களுடன் இணைந்து வாழ்கின்றபோது அறிவைப் புரிந்துகொள்கின்றன. ஆனால் மனிதர்கள் தொண்ணூறு வீதம் தமது அறிவினால்தான் தமக்குள் ஆற்றலைக்கூட உருவாக்கிக் கொள்கின்றார்கள். பத்துவீதம்தான் ஆற்றல் பிறப்பினால் வருகின்றது. ஆனால் விரைவாக ஆற்றலை வளர்த்துக்கொள்ள முடிகின்றது. உதாரணமாக எப்படி நீந்துவதென்று பாடப்புத்தகத்தைப் படித்துவிட்டு நடுக்கடலில் குதித்து நீந்தமுடியாது. எனவே ஆற்றல் என்பது பயிற்சிகளால்தான் வருகின்றது. அவை ஆழ்மனப்பதிவின் இயக்கபூர்வமாகி எவ்வாறு உடல் உள்ளுறுப்புக்கள் அறிவுடன் தொடர்புபடாமல் இயங்குகின்றதோ அவ்வாறு ஒரே நேரத்தில் இரண்டு கைகளும் இரண்டு கால்களும் இயங்கவேண்டும். மேலும் அறிவும் மனமும் வேறு சிந்தனைகளில் இருந்தாலும் இந்த இயக்கத்தை பாதிக்காது இருக்கவேண்டும். இவ்வாறு அறிவியல்களிலும் ஆற்றல் இருக்கின்றது. உதாரணம் நாம் கடைகளிலே பொருள்களை வாங்கும்போது எம்மால் மனக்கணக்கு பார்க்கச் சிரமப்படுகின்றோம். ஆனால் எம்மை விடக் கல்வியறிவு குறைந்த கடையில் நிற்பவர்கள் கணக்கை மனதால் இலகுவாகப் பார்த்து சொல்கின்றார்கள். தவிர ஒரே நேரத்தில் பலரது கணக்கையும் மனதில் கூட்டிச் சொல்கின்றார்கள். இதற்குக் காரணம் நாம் கருவிகளைக்கொண்டு சிரமமில்லாமல் வாழப் பழகியதுதான். தவிர எமக்கு இருக்கும் அவசரம் பல வேலைகள் ஒரே நேரத்தில் செய்ய வேண்டிய பதட்டம். எனவே அறிவுகூட எமக்குள் ஆற்றலாக பகுத்து உணர்வதற்கு நாம் கற்ற கல்விகளை தொடராக வாழ்வில் பயன்படுத்துவதுதான் காரணமாகும்.

நாம் எவ்வளவு கல்விகளைக் கற்றாலும் எவ்வளவு நூல்களை வாசித்தறிந்தாலும் தவிர சூழலில் இருந்து பெற்றுக்கொண்டாலும் அவற்றை நாம் வாழ்வில் பிரயோகிக்காவிட்டால் நாம் கற்ற கல்வியில் எந்தப் பயனும் இல்லை.

## ஆன்மாவும் அறிவும்

எமது மூளை பல சிந்தனைகளாகப் பிரிந்து, பல்வேறு நினைவுகளை எமக்குள் சேமித்துவைத்து நாம் நினைவுபடுத்திச் சிந்தித்து, புத்தி சித்தமாய் வாழ்கின்றோம். சில வேளைகளில் புத்தி சித்தம் இல்லாது வாழ்கின்றோம். இங்கு சித்தம் எனக் குறிப்பிடப்படுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் விதியையும், தெய்வ சக்திகளின் அனுக்கிரகங்களையும் குறிக்கும். எனவே எமது புத்தியும் சரியான நேரத்தில் சரியாகச் சிந்திப்பதற்கும், பிழையான நேரத்தில் பிழை யாகச் சிந்திப்பதும்கூட விதிப்பிரகாரமே நடைபெறுகின்றது.

எவ்வாறாயினும் எமது மூளை பல சிற்றறைகளாகப் பிரிந்து ஒவ்வொரு சிற்றறை களுக்கும் பொறுப்பாக இலத்திரனியல் துவள்கள் செயற்பட்டு எமக்கு நினைவுகளை நினைவுபடுத்திச் செயற்பட வைக்கின்றது. இந்த அமைப்பு ஒரு தேன்கூடுபோலக் காணப் படுகின்றது. எமது ஆன்மா இராணித் தேனியாகவும் இலத்திரனியல் துவள்கள் வேலைக்காரத் தேனிகளைப்போல் செயற்படுகின்றன. ஆனால் தேன்கூட்டில் இராணித் தேனிக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு வேலைக்காரத் தேனீக்கள் செயற்படுவதுபோல் எமக்கு கட்டுப்பட்டு எல்லா நேரமும் மனம் செயற்படுவதில்லை. சில வேளைகளில் எமது மனமும் உணர்வுமே எம்மை வழிநடத்தவும் செய்கின்றது. ஆனால் சித்தர்கள் முழு அளவில் மனதைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து வாழ்ந்தார்கள். இவ்வாறானவர்களே தெய்வங்களாகவும் போற்றப்பட்டார்கள்.

இந்தவகையில் எமது மூளை தேன்கூடு போன்ற அமைப்பில் இருப்பதால் ஆர்வமாக நாம் அறிந்த விடயங்களும் அதிகம் நாம் வாழ்வில் பிரயோகித்து வாழ்கின்ற விடயங்களுமே எமது நினைவில் நீங்காது என்றும் எமது நினைவில் இருக்கின்றது. மேலும் நாம் கல்வி கற்கின்ற காலத்தில் பாடப்புத்தகங்களை வாசித்தறிந்து நினைவில் வைத்திருக்க சிரமப் படுகின்றோம். ஆனால் கதைப் புத்தகங்களை வாசிப்பதிலோ, காவிய நூல்களை வாசிப்பதிலோ, புதினப் பத்திரிகைகளை வாசித்து புதினங்களை அறிந்துகொள்வதிலோ சிரமப்படுவதில்லை. தவிர கல்வியில் கூட நாம் சுயதேடல் அறிவுகள் ஆர்வமாக சுவாரசியமாக அறிய முயன்று தவிர எமது வாழ்விலும் பிரயோகித்து அறிய முயன்றவை எமது நினைவில் இருந்து என்றும் அழியாது இளமையான நினைவுடன் எமக்குள் இருக்கின்றது. தவிர நாம் சுவாரசியமாக அறிய முயன்று எம்மால் அறியமுடியாமல் போன அறிவுகள் நாம் ஆர்வமாக இருப்பதால் கல்வி வாழ்க்கைக்குப் பின்பும் எமக்கு அவை விளங்கக்கூடிய சந்தர்ப்பங்களும் ஏற்படலாம்.

மேலும் நாம் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்பதற்காகவும், நாம் அவற்றைக் கடப்பதற்காகவும் கற்றவை எமது நினைவில் இருந்து நீக்கப்படுகின்றது. காரணம் எமது மூளையால் ஒரு அளவுக்குமேல் நினைவுகளை நினைவில் வைத்திருக்க முடியாமையாகும், தவிர புதிய விடயங்களை அறிய வேண்டியும் நினைவில் வைத்திருக்க வேண்டும் என்பதற்கும் ஆகும்.

இவ்வாறு எமது நினைவில் சுவாரசியமானவை ஆர்வமாக அறிந்தவை நினைவில் நீங்கா இடம்பிடித்தாலும் துன்பமான நினைவுகளும் எமக்குத் திரும்பத் திரும்ப வந்தாலும் எமது மனம் இன்பத்திலேயே அதிக ஆர்வம் காட்டுவதால் துன்பங்கள் மறைகின்றது.

மேலும் ஒரு காலத்தில் அறிவியல்கள் ஏடுகளில் எழுதிப் பாதுகாக்கும் முறைகள் காரணமாக எல்லோராலுமே இலகுவாக எழுத முடியாமையாலும் ஏடுகளை வாசிப்பதில்கூட சிரமங்கள் இருந்தமையாலும், செவிவழியாகவே பல பாரம்பரியங்கள் பாட்டி கதை சொல்லும் முறைமூலம் பாதுகாக்கப்பட்டன. மேலும் புராண இதிகாசங்கள்மூலம் அறிவை அறியவைக்கும்

*பெருமைக்குரிய யாதொரு இயல்பும் இல்லாமல் பெருமை பாராட்டுதல் கூடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியும் கதைகளாகவும் சுவாரசியமாக அறியவைக்கும் முயற்சியாகவே இருந்தது. மேலும் ஒரு காலத்தில் கல்வியென்பது அதிக திணிப்பாக இல்லாததனால் அன்றைய காலத்தில் கல்வி கற்றவர்கள் தமது வயோதிப காலத்திலும் தாம் கற்ற கல்வியை நினைவு படுத்தக்கூடியவர்களாகவும் இருந்தார்கள். எனவே சுவை என்பது நாம் உண்ணும் உணவில் மட்டுமல்ல நாம் அறியும் அறிவிலும் இருக்கின்றது. இந்த வகையில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறுகின்ற அன்னதானமும், ஞானச்சுடர்மூலம் வழங்கப்படுகின்ற அறிவுத்தானமும், சுவை மிகுந்த அனுபவங்களையும் எமக்குத் தருகின்றது. எனவேதான் எனது கவிதைகள்மூலம் எமது மூளையை தேன்கூடாக வர்ணித்துமிருந்தேன். மேலும் துறவிகள்போல் எமது புலன்களை அடக்கி, அலைபாயும் மனதை ஒருநிலைப்படுத்தி எம்மை நாமே ஆளமுடியாவிட்டாலும், கல்வி கற்பதிலோ அல்லது ஒரு செயலைச் செய்வதிலோ எமது மனம் ஒருநிலைப்படா விட்டாலும் பக்திமார்க்கமாகவும், பண்பாட்டு ரீதியாகவும் ஆர்வமாகவும் பெற்றுக்கொண்ட அறிவு என்றும் எமது நினைவில் நீங்காது இருக்கின்றது. மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தவும் படுகின்றது. இதனால் அழியாது நினைவில் என்றும் இளமையாகவும் இருக்கின்றது.

எவ்வாறாயினும் ஒரு காலத்தில் அழிந்துபோன அறிவியல்கள் (வேதங்கள்) இதிகாசங்கள் மற்றும் புராணங்கள் முனிவர்களாலும் ரிஷிகளாலும் முன்னோரின் ஆன்மாக்களை தெய்வசக்திகளாகக்கொண்டு நேரடியாகவே தெய்வங்களின் அருளால் கிடைக்கப்பெற்றதான செய்தி இன்றைய ஆன்மீக (தெய்வ) அருள்வாக்குகளில் இருந்து, அவை உண்மையாக இருக்கும் என ஊகித்தறிய முடிந்தாலும் இன்று அவைபோன்ற தேவைகள் எவையும் இல்லை. மாறாக இன்றைய தேவை புராண இதிகாசங்கள் இறக்குமதி செய்யப்பட்டவையல்ல. அவை எமது பாரம்பரியங்களே என்பதை நிரூபிக்கவேண்டிய தேவையே உள்ளது. மேலும் தெய்வ சக்திகள் முனிவர்களுக்கும் ரிஷிகளுக்கும் நேரடியாக அருள்புரிவதுபோல் எமக்கு அருள்புரியாது விட்டாலும் உணர்வு அறிவு ஆன்மா என எமது மனம் வேறுபட்டும் முரண்பட்டும் செய்யப்பட்டாலும் நாம் சுய நினைவுடனும் சுய சிந்தனையுடனும் சுய தேடல்களுடனும் அறிவை அறிந்தாலும் எமது அறிவுக்குத் தெரியாமலேயே எமது உணர்விலும் அறிவிலும் தெய்வ சக்திகளால் தலையிட முடியும். தவிர இன்றைய கலியுகத்தில் போலிகளும், பொய் பித்தலாட்டங்களுமே இருப்பதால் அறிவையே முதன்மைப்படுத்த வேண்டிய தேவையும் மேலும் மத மறுமலர்ச்சிகள் மதம் கடந்ததாக உருவாக அறிவினால் மட்டுமே முடியும் என்ற காலத்தின் தேவையுமாகும். இவ்வாறு இருந்தபோதும் தெய்வ சக்திகளால் எமது உணர்விலும் அறிவிலும் மட்டுமல்ல உடல் உள்ளுறுப்புக்களின் இயக்கங்களிலும் தவிர கருவில் இருந்து உருவாகும் பிறப்பிலும் வாழ்வியல் சூழ்நிலைகளிலும் தவிர மாற்றங்களிலும் விதிப்பிகாரம் தலையிட முடியும்.

## நம்பிக்கைகளும் அறிவியல்களும்

அறிவினால் அறியமுடியாத அற்புதங்கள்தான் நம்பிக்கைகளுக்கு அடிப்படையானாலும் மதங்கள் அறிவை முன்வைப்பதில் அதிக கற்பனைகளைப் பயன்படுத்தியதாலும் மதங்கடந்த

*ஆர்வம் மின்விசையின் ஆற்றலிலும் வலிமையானது. ஆர்வமே செயலூக்கத்தின் ஊற்றுக்கண்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல்கள் ஊடாகவே மதங்களின் நம்பிக்கைகளை உண்மையென நிரூபிக்கவேண்டியும் இருக்கின்றது. மேலும் இறைவனை அறிவினாலேயே அறியமுடியும் என்ற புதிய போக்கு அறிவியல் வளர்ச்சிகளின் பயனாகவே சாத்தியப்பட்டும் இருக்கின்றது. எனவே மாயாஜாலங்கள் அல்ல மனித சேவையே மகத்துவமிக்கது. தெய்வ அருளுக்கும் சான்றாகின்றது. நம்பிக்கை களையும் வலுவாக்குகின்றது. (முற்றும்)

---

## சிந்தை கவர்ந்த தியாகச்சுடர்
## செம்மல் மோகனதாஸ் சுவாமிகள்

தியாகச்சுடர் செம்மல் மோகனதாஸ் சுவாமி அவர்களைத் தரிசிக்கும் வாய்ப்பு அடியேனுக்கு 2012ஆம் ஆண்டு கிடைத்தது பெரும் பாக்கியமாகும். அவ்வேளையில் சுவாமி அவர்கள் என்னை இன்முகத்துடன் வரவேற்று அன்பு கலந்த வார்த்தையால் உரையாடி மனமார வரவேற்று உபசரித்தார்கள். அவர்களின் இதமான உபசரிப்பினால் காந்தம் கவர்ந்திழுத்த இரும்புபோல் நான் அவர் வசமானேன். அவரது சேவை, தியாகம், அர்ப்பணிப்பு, உதவிபுரியும் பெருங்குணங்கள் என்பன இறைவனால் அவருக்கு வழங்கப்பட்ட நல்ல வரங்களாகும்.



மேலும் 2012ஆம் ஆண்டு தொடக்கம் 2020ஆம் ஆண்டுவரை அடியேன் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இருந்து பாத யாத்திரைக் குழுவினருடன் கதிர்காமக் கந்தன் ஆலயத்திற்குப் பாத யாத்திரை மேற்கொண்டு கந்தப்பெருமானின் நல்லருள் பெற்றேன்.

இப் பாதயாத்திரையின்போது எமது யாத்திரைக் குழுவினரையும் என்னையும் அன்புடன் வரவேற்று எமக்கு வேண்டிய தேவைகளையும் பூர்த்திசெய்து தந்தது மட்டுமல்லாமல் பிரயாணச் செலவுக்கான நிதியுதவி யையும் வழங்கி உதவினார்கள்.

அத்துடன் அடியேன் மேற்கொண்ட கதிர்காமப் பாதயாத்திரை தொடர்பான புகைப்படக் காட்சிகளையும் சாமியவர்கள் வெளியிடும் மோகனமயக்கறுத்து இறை அருள் கூட்டும் ஞானச்சுடர் சஞ்சிகையில் பிரசுரம் செய்து எமக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கியுள்ளார்கள். அன்னாரின் பணிகள் மேலோங்க வாழ்த்துகின்றேன்.

இன்னலுறும் மக்களுக்கு இரவுபகற் காலமெலாம்
உண்ண உணவளித்து ஓம்பி - பின்னும்
போக வழியின்றி இன்னலுறும் ஏழையர்க்கும்
மோகனதாஸ் சுவாமியே நற்றுணை.

*வேல்சாமி*
*காரைதீவு.*

***உடலை வளர்த்தவர்கள், உணவை வளத்துக்கொள்ளத் தவறிவிட்டார்கள்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மதம் அது இந்து மதம்

– திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள் –

அன்பு மதம் அது இந்து மதம்
இந்து மதம் இது அனைவருக்கும்
சொந்தமான அன்பு மதம்
ஐயம் தீர்த்திடும் அறிவு மதம்
மெய்யறிவு தந்திடும் மேலாம் மதம்
ஆல முண்டு ஞாலம் காத்த
கால காலனின் தியாகத்தைச் செப்பிடும்
சில மதம் இது சிவ மதம்.

உலகம் ஒன்று இறைவன் ஒன்று
கலகம் இன்றி வாழ்வோம் இங்கு
என்றே சொல்லி எம்மை யெல்லாம்
நன்றே வாழ வைக்கும் நல்ல மதம்
வேத வித்தின் சாரமாம் இந்து மதம்
நாம ரூபம் கடந்து நல்லறிவு புகட்டும் நல்மதம்

மாயை என உலகைத் தள்ளுவது அஞ்ஞானம்
இறைவனே உலகமென ஏற்றுக் கொண்டது மெய்ஞானம்
இறைவன் லீலையைப் புரிந்துகொண்டால் உலகம் நித்தியம்
புரியாத பேர்களுக்கு உலகம் அநித்தியம்
இந்தப் பகுத்தறிவைத் தந்தது இந்து மதம்
கல்வி ஞானம் தந்து கரை சேர்க்கும் மதம்
சர்வலோக ரட்சகராம் சதா சிவனின்
சன்மார்க்க மதம் இது சர்வ மதம்

பாவியல்ல நாங்க ளென்று
பகுத்தறிந்து சொன்ன மதம்
காவலனாய்க் கடவுளைக் கண்ட மதம்
வாழ்வின் அர்த்தம் புரியவைக்கும் இந்து மதம்
இது அகிலம் வாழும் அனைவருக்கும் சொந்த மதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிலிருந்து பல கிளைகள் தோன்றினாலும்
என்றும் அந்த ஒன்றுதானே போஷிக்கும் காப்பகம்
சைவம், சாக்தம், வைணவம், காணபத்தியம்
கௌமாரம், சௌரம் என ஆறு கிளைகள் கொண்ட மதம்
ஆறுதல் தந்தே அரவணைத்திடும் அன்பு மதம்
பக்தி ஞானம் யோகம் தந்தே
பக்குவம் ஆக்கிடும் பரந்த மதம் இந்த இந்து மதம்

ஞான ஒளிக்கதிரினாலே அகத் தாமரையை
மலர வைக்கும் ஞானமதம் இது அறிவு மதம்
புராண இதிகாசங்களைத் தந்தெமைக்
கனிய வைக்கும் இனிய மதம் இது பழமதம்
உள்ளத்தைக் கனிய வைக்கும் உலக மதம்
கன்னத்தைப் போக்கிடும் வெள்ளை மதம்
சாதி பேதம் கடந்து நிற்கும் ஆதிமதம்

ஐம்புலக் கூட்டினுள் சிக்கிய சீவனை
விலங்குடைத்தே விடுதலை தந்திடும் வீரமதம்
இது ஜோதி மதம்
அவனின்றி அணுவும் அசையா தென்னும்
உண்மை சொல்லியே அகந்தை யடக்கிடும்
அன்பு மதம் இது இந்து மதம்
பகுக்க முடியா ஓரணுவே பரமாத்மா
இதன் ஒவ்வொரு துளியுமே ஜீவாத்மா
இந்தப் பரவித்தையை அருள்வது இந்துமதம்
இது அனைவருக்கும் சொந்த மதம்

பலபல வேடம்தாங்கிப் பாருலகில் வந்தே
பற்பல லீலைகள் புரிந்ததினால் பல நாமம்
பலரூபம் கொண்டான் ஒருவனான இறைவன்
இந்தப் பேரறிவைத் தந்தது இந்து மதம்
கல்வி கரையில் கற்பவை நாட்சில
எல்லாம் அவனே என்ற உண்மையை உணர்ந்தவர்
கரை யேறினரே

*அதிருப்தியைத் தருபவர்கள் திருப்தி பற்றிப் பேசும் உரிமை இல்லாதவர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையேற வைத்திடும் கல்வியைத்
தந்திடும் அறிவு மதம் இது இந்து மதம்
இது அனைவருக்கும் சொந்தமதம்
வேதத்தின் அந்தம் வேதாந்தம்
சித்தத்தின் அந்தம் சித்தாந்தம்
இரண்டும் ஒன்றான நிலையே அத்வைதம்
அத்வைத நிலையே சத்சித் ஆனந்தம்
சச்சிதானந்தமே மோட்சம், விடுதலை
சுதந்திரமென்ற பதங்களின் பொருளாகும்.

இதுவே மனிதனின் இயல்பு நிலையாம்
இதுவே பேராற்றல் தந்திடும் பேரானந்த நிலையாம்
கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்
உண்மை உணர்ந்தவர் உரைத்த கூற்றிது
உணர்வால் அறிதல் தான் அது ஆதலாம்
தன்மையினால் பிறிதொன்றைக் காணார்
இப் பேருண்மையை உணர்த்துவது
இந்து மதம் இது அன்பு மதம்
இது இக பர சுகமளிக்கும் சர்வ ரோக நிவாரணி
இந்துவாக வாழ்வோம்
இக பர சுகம் பெறுவோம்
கூடி வாழ்ந்தால் கோடி நன்மை
இதுவே எனது அனுபவ சித்தாந்தம்
யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்.

---

## அறுகம்புல் மாலை விநாயகருக்கு அணிவது ஏன்?

அனலாசுரன் என்ற அசுரன் தேவர்களை மிகவும் துன்புறுத்தி வந்தான். தன்னை எதிர்ப்பவர்களை அனலாய் மாற்றித் தகித்துவிடுவான். இவனை பிரம்மாவாலும் தேவேந்திரனாலும் அடக்கமுடியவில்லை. அவர்கள் சிவ பார்வதியைச் சந்தித்து முறையிட்டனர். சிவனும் விநாயகருக்கு அந்த அரக்கனை அழித்து வரும்படி கட்டளையிட்டார். விநாயகரும் பூத கணங்களுடன் போருக்குச் சென்றார். அங்கு சென்றதும் அனலாசுரன் பூதகணங்களை எரித்துச் சாம்பலாக்கினான். விநாயகர் அனலாசுரனுடன் மோதினார். ஆனால் அவனை வெற்றிகொள்ள முடியவில்லை. கோபத்தில் அவனை அப்படியே விழுங்கிவிட்டார். வயிற்றுக்குள் சென்ற அனலாசுரன் அதை வெப்பமடையச் செய்தான். விநாயகருக்கு அந்த வெப்பத்தைத் தாங்க முடியவில்லை. அவருக்கு குடம் குடமாகக் கங்கை நீர் அபிசேகம் செய்யப்பட்டது. அதனால் எந்தப் பயனும் ஏற்படவில்லை. இந்நிலையில் ஒரு முனிவர் அருகம்புல்லைக் கொண்டுவந்து விநாயகரின் தலைமேல் வைத்தார். அவரது எரிச்சல் அடங்கியது. அனலாசுரனும் வயற்றுக்குள் ஜீரணமாகிவிட்டான். அன்று முதல் தன்னை அறுகம்புல் கொண்டு அர்ச்சிக்க வேண்டுமென விநாயகர் கட்டளையிட்டார்.

***ஒழுங்குகள் - ஒழுக்கங்கள் உருவாகப் பல ஆண்டுகள் ஆகும்.***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழைக் கற்றார் கரையேறுவார்

(தொடர்ச்சி...)

– திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள் –



**(திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் விளக்க உரைகளிலிருந்து தொகுப்பாக்கம் செய்யப்பெற்றது)**

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள் போற்றும்
திருப்புகழைக் கேளீர் தினம்"

## திருப்புகழ் - விநாயகர் துதி

எல்லாக் கருமங்களுக்கும் முன்னவராக வீற்றிருந்து அக்கருமங்கள் எவ்வித விக்கினங்களுமின்றி நிறைவெய்துவதற்கு விநாயகரை வேண்டித் துதிசெய்து வழிபாடியற்றுதல் மரபாகும். அவ்வகையில் அருணகிரிநாதர் தாம் இயற்றிய திருப்புகழுக்கு விநாயகர் துதி பாடியுள்ளார். அவ்விதமே வாரியார் சுவாமிகளும் தனது சொற்பொழிவுகளின் தொடக்கத்தில் இந்த விநாயகர் துதியையே இசைபடப் பாடி தனது உரைகளை ஆரம்பிப்பார்.

கைத்தல நிறைகனி யப்பமொ டவல் பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மென வினை கடிதேடும்
மத்தமும் மதியமும் வைத்திடு மரன் மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறை ரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிரமணி படும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாரியார் சுவாமிகள் உரைசெய்த திருப்புகழ் பாடல்களில் தேர்ந்தெடுத்தவை:**

***திருப்புகழ் - திருச்செந்தூர் முருகன்மீது பாடப்பெற்றது.***

தண்டை யணி வெண்டையங் கிண்கிணி சதங்கையுந்
தண் கழல் சிலம்புடன் கொஞ்சவே நின்
தந்தை யினை முன் பரிந் தின்பவுரி கொண்டு நன்
சந்தொட மணைந்து நின் றன்பு போலக்
கண்டுறக டம்புடன் சந்த மரு டங்களும்
கஞ்ச மலர் செங்கையுஞ் சித்து வேலும்
கண்களு முகங்களுஞ் சந் திர திறங் களுங்
கண் குளிர என்றன் முன் சந்தியாவோ
புண்டரிக ரண்டமுங் கொண்ட பகி ரண்டமும்
பொங்கி யெழ வெங்களங் கொண்ட போது
பொன் கிரியெனஞ் சிறந் தெங்கினும் வளர்ந்து முன்
புண்டரிகர் தந்தையுஞ் சிந்தை கூரக்
கொண்ட நட னம் பதஞ் செந்திலு மென்றன் முன்
கொஞ்சி நட னங் கொளுங் கந்தவேளே
கொங்கை குற மங்கையின் சந்தமண முண்டிடுங்
கும்ப முனி கும்பிடுந் தம்பிரானே.

***பொழிப்புரை:***

தாமரை மலர்மீது வாழும் பிரம்மதேவரது அண்டமும் அதனைச் சூழ்ந்துள்ள வெளியண்டமும் கொதிப்புற்று விலக வெம்மையான போர்க்களத்தை அடைந்தபோது பொன்மேரு கிரிபோல் மிகவும் அழகாக எல்லா அண்டங்களும் திருமேனியில் அடங்குமாறு விசுவரூபங்கொண்டு பிரமதேவருடைய தந்தையாகிய திருமால் தாம் முன் ஈரடியில் அளக்கும்பொருட்டு எடுத்த திரிவிக்கிரம வடிவம் இதற்கு இணையாகாதென்று எண்ணி மகிழ்ச்சியடைய முன்னாளில் தேவரீர் நடித்தருளிய திருவடிகளினால் திருச்செந்தூரிலும் அடியேன்முன் கொஞ்சிப் பேசி திருநடனஞ் செய்தருளிய கந்தக்கடவுளே, ஞானமாகிய தனங்களையுடைய வள்ளியம்மையாருடைய திருமேனியில் அணிந்துள்ள சந்தன மணத்தை முகப்பவரே, அகத்திய முனிவர் வணங்கும் தனிப்பெருந் தலைவரே தண்டையும், அழகிய வெண்டையமும், கிண்கிணியும், சதங்கையும், இனிய ஒலியுடைய வீரக்கழலும், சிலம்பும் இனிது ஒலிக்க தேவரீரது பிதாவாகிய சிவபெருமானது திருமுன் அன்பாக இனிய நடனம் புரிந்து மிக்க மகிழ்ச்சியடைந்து நின்ற அன்புபோலே அடியேனும் அத் திருநடனத்தைக் கண்டு மகிழ்ச்சியடையுமாறு கடப்ப மலர் மாலையும், அழகிய மணி மகுடங்களும், தாமரை மலர்போன்ற சிவந்த திருக்கரங்களும் ஒளிவீசும் வேலாயுதமும், கருணை பொழிகின்ற திருக்கண்களும், ஆறு திருமுகங்களும், சந்திரகிரகணம் போன்ற குளிர்ந்த ஒளியும் அடியேனுடைய கண்கள் குளிர தோன்றி அருள் புரியாவோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விரிவுரை:*

தண்டையென்பது வீரர்கள் அணியும் ஒரு ஆபரணம். முருகப்பெருமானுடைய திருவடியிலும் சிறந்த இரத்தினத் தண்டை மிக்க அழகாகத் திகழும். அத் தண்டை இனிய ஒலியை உண்டாக்கும்.

"முழு மதி யன்ன ஆறுமுகங்களு முந்நான் காகும்
விழி களி னருளும் வேலும் வேறுள படையின் சீரும்
அழ கிய கர மீராறும் அணி மணித் தண்டை யார்க்கும்
செழு மலரடியுங் கண்டான் அவன் தவம் செப்பற் பாற்றோ"

-கந்தபுராணம்.

(அத் தண்டைத் திருவடியை தாரகன் அளப்பருந்
தவம் புரிந்தாற் கண்டான்)

இதுபோலக் கந்தரலங்காரத்திலும்:

"சிந்திக்கிலேன் நின்று சேவிக்கிலேன் தண்டைச் சிற்றடியை
வந்திக்கிலேன்..."

வெண்டையம் என்பது - திருவடியில் அணியும் ஓர் ஆபரணம். பெருமான் திருநடனம் செய்யும்போது அத் திரு ஆபரணம் நன்கு முழங்கும்.

கிண்கிணி என்பது - இடையில் கட்டும் திருவாபரணம். அது முருகப்பெருமானுடைய திருவரையில் மிகவும் இனிய நாதத்தையுண்டாக்கும். அவ்வோசை பதினான்கு லோகமும் கேட்கும்.

சதங்கை என்பது - திருவடியிலும் இடையிலும் அணியும் பொன்னும் மணியும் சேர்ந்த ஆபரணம். முருகவேள் அணிந்திருக்கும் சதங்கை நான்கு வேதங்களின் கீதங் களையும் ஒலிப்பதாக அமைந்திருக்கும்.

"மறை சதுர் விதந் தெரிந்து வகை சிறு சதங்கை கொஞ்ச
மலரடி வணங்க என்று பெறுவேனோ"

-திருப்புகழ்.

தண்கழல் - என்பது வீரர்கள் பாதத்தில் அணிகின்ற சிறந்த அணிகலமாகும். எந்தை கந்தவேளின் திருவடியில் விளங்கும் வீரக் கழலின் இனிய ஒலியைக் கேட்க இனிய யாழில் வல்லவளாகிய வாணி தேவியும் வந்திருப்பாள்.

"மதுர வாணியுற்ற கழலோனே"

-திருப்புகழ்.

சிலம்பு - என்பது வீரர்களும் கற்புடைய மாதர்களும் அணியும் ஒரு நல்ல அணிகலன். கண்ணகியின் காற்சிலம்பு காரணமாக விளைந்தது யாதென உலகமறியும். இங்கே முருகவேள் திருவடியில் விளங்கும் சிலம்பு ஞான மயமானது. அது பரவிந்து எனப்படும். எப்போதும் அடியார் அலக்கண் அகல இனிய நாதத்தைத் தரும்.

*விரோதிகளைவிட வஞ்சகர்களே மோசமானவர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இனிய நாத சிலம்பு புலம்பிடும்
அருண ஆடக் கிண்கிணி தங்கி அடிதாராய்"
-திருப்புகழ்.

தந்தையினை முன் பரிந் தின்பவுரி கொண்டு நன்
சந்தொட மணைந்து நின் றன்பு போல:-

முருகவேள் தன் தந்தையாராகிய சிவபிரானது திருமுன் மிக்க அன்புடன் திருநடனம் புரிவார். அக் குழந்தையின் திரு நடனத்தைக் கண்டு பிறை சூடிய பெருமான் பெரிதும் மகிழ்வார். "அதுபோன்ற நடனத்தை அடியேனுக்கும் காட்டி அருள்வாய்" என்று வேண்டுதல்.

சிந்து வேலும் - வேல், வெல் என்ற முதனிலை நீண்ட தொழிற்பெயராகும். எல்லாவற்றையும் வெல்வது அறிவு. அந்த அறிவு ஒளிமயமானது. ஆதலினால் ஒளியை வீசும் வேலாயுதம் என்றார்.

கண் குளிர என்றன் முன் சந்தியாவோ - இறைவனே.... தேவரீரது திருத்தந்தையார் முன் நடித்தருளியதுபோல அடியேனது கண்கள் குளிர உமது திருநடனக்கோலந் தோன்றியருள வேண்டும்.

புண்டரிக ரண்டமும் கொண்ட பகிரண்டமும் பொங்கியெழ- சூரபன்மனது போர்க்களத்தின் வெம்மையால் பிரமாண்டமும் அதைச் சூழ்ந்துள்ள பகிரண்டமும் கொதிப்புற்று இடருற்றன.

எங்கினும் வளர்ந்து - சூரபன்மனுக்கு வேற்பெருமான் விசுவரூபங் காட்டியருளியபோது எல்லாம் தன்னுள் அடங்க எங்குமாய் நின்றனர். விசுவரூபம் ஆகிய திருப்பெரு வடிவில் எல்லா மலைகளும், திருவடியின் முற்பாகத்தில் கடல்கள் யாவும் திருவடி விரல்களில் இடியும் நட்சத்திரங்களும், கிரகங்களும் அழகிய பரடுகளில் வருணனும் குபேரனும் நிருதியும் அடங்கினர். கணைக்காலில் - முனிவர்களும், தெய்வமணிகளும், முழந்தாளில்- வித்யாதரர் முதலியோரும் தொடையில் இந்திரனும் இந்திரகுமாரன் சயந்தனும் தொடை மூலத்தில் இயமனும் அரையின் முற்பாகத்தில் அசுரர்களும் விலாப்பக்கத்தில் தேவர்களும் அடங்கியிருந்தனர். மூலாதாரத்தில் நாகர்களும் கோசத்தின் நுனியில் அமிர்தமும் உந்தியில் உயிர்களும் மார்பில் எல்லாக் கலைகளும், முப்புரிநூலில் ஞானமும், நுனி மயிரில் அண்டங்களும், உள்ளங்கையில் சகல போகப் பொருள்களும், தோள்களில் திருமாலும், பிரமனும் அடங்கினார்கள்.

கைவிரல்களில் - தெய்வப் பெண்களும், கண்டத்தில் நாதமும் அக்கினியும் வாயில் வேதங்களும், பல்லில் எழுத்துக்களும், நாவில் ஆகமங்களும், இதழில் எழு கோடி மந்திரங்களும், நாசியில் வாயுவும் அடங்கினார்கள். திருக்கண்களில் - சந்திரனும் சூரியனும், செவியில் திசைகளிலுள்ள நூறு உருத்திரர்களும், நெற்றியில் குடிலையும் (ஓங்காரம்) சென்னியில் சிவபெருமானும் அடங்கினார்கள்.

புண்டரிகர் தந்தையுஞ் சிந்தை கூர - மாவலிபால் மூவடி கேட்டு திரிவிக்கிரம வடிவங்கொண்டு ஈரடியால் மூவுலகங்களையும் திருமால் அளந்தனர். அவர் இத் திருப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருவடிவத்தை நோக்கி தான் கொண்ட பெருவடிவம் முருகவேளின் திருப்பெருவடிவத்தில் ஒரு சிறு அணுபோல் அடங்கியதைக் கண்டு அற்புதமும் அன்புங் கொண்டனர்.

கொண்ட நடனம் பதம் - திருமுருகன் அத் திருப் பெருவடிவங்கொண்டு நடித்தருளினார்.

செந்திலிலும் என்றன் முன் கொஞ்சி நடனங் கொளும் கந்தவேளே- அருணகிரிநாத சுவாமிகள் திருச்செந்தூரை தரிசிக்க விரும்பிச் சென்ற சமயம் மாசி மாதம். செந்தூரில் பிரம்மோத்சவம் ஏழாந் திருநாள். ஆறுமுக சுவாமியார் சிறந்த அணிகலன்களுடன் மலர் மாலை புனைந்து நீலக் கடலில் சிவந்த ஞாயிறு உதயமாகும்போது அந்த அருட்கடலிலிருந்து எழுந்து வருவதுபோல் விலாமிச்சம் வேர் விமானத்தில் எழுந்தருளி வருகின்றனர். அந்தக் கண்கொள்ளாக் காட்சியை பல்லாயிரம் அன்பர்கள் திரண்டு விண்ணருவியெனக் கண்ணருவி பெய்து சேவிக்கின்றனர். இந்த அற்புதக் காட்சியை அருணையடிகள் கண்டு தேனுண்ட வண்டுபோல் மகிழ்ந்தனர். முருகா, என்னே உன் திருக்கோலச் சிறப்பு... இத்துணை திரு ஆபரணங்களைப் புனைந்து காணக் காணத் தெவிட்டாத காட்சியுடன் விளங்குகின்றனையே... இப்படியே சிறிது நடித்தருளும்... உமது திருநடனங்காண விளைகின்றேன். கருணை புரியும் என்று வேண்டினார்.

சந்த மண முண்டிடும் - வள்ளி பிராட்டியின் திருமேனியில் அணிந்துள்ள சந்தனத்தின் நறுமணத்தினை முருகவேள் முகக்கின்றனர். சந்தனம் பிறப்பது பொதியமலை. தமிழ்ச் சங்கம் இருப்பதும் பொதியமலை. எனவே சந்தனத்தில் தமிழின் இனிய குளிர்ந்த மணமுண்டு. தமிழ்க் கடவுளாகிய முருகன் அத் தமிழ்ச் சந்தனத்தை நுகர்கின்றார்.

கும்பமுனி கும்பிடுந் தம்பிரானே - தமிழ் முனியாகிய அகத்தியர் வணங்குந் தனிப்பெருந் தலைவர் முருகன்.

***கருத்துரை:***

திருப்பெரு வடிவங்கொண்டு நடித்த திருவடிகளின் நடனத்தினை செந்திலிலுங் காட்டியருளிய கந்தவேளே.... தேவரீரது அழகிய திருவுருவம் எனது கண் குளிரத் தோன்ற வேண்டும்.

## தொகுப்பாக்கத்திற்கான குறிப்புரை:

மேற்போந்தவாறு இத் திருப்புகழுக்கு வாரியார் சுவாமிகள் ஆக்கியருளிய விளக்க உரைகள் சிற்சிலவிடங்களில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது. மேலதிக விளக்கங்களுக்கு வாரியார் சுவாமிகளின் திருப்புகழமிர்தம் மலர் ஜனவரி. 1949 என்ற நூலிதழைப் பார்வை யிடலாம். இந்தத் திருப்புகழ்த் தொடரில் அடுத்து சுவாமிமலை - திருவேரகத்தில் அருணகிரிநாதர் செய்தருளிய திருப்புகழும் வாரியார் சுவாமிகளின் விளக்கவுரைகளும் அமையும்.

(தொடரும்...

*திட்டமிடாத வாழ்வு காட்டாற்று வெள்ளம் போன்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி

– திரு செ. சிவபாதம் அவர்கள் –

முன்பு ஒரு காலத்தில் பிரமதேவர் பல உயிர்களைப் படைக்க விரும்பி முதலில் சனகர் முதலிய நான்கு புதல்வர்களைப் படைத்தார். அப்போது இவர்கள் வேதங்களைக் கற்று நல்ல தவத்தர்களாயினர். இதன்பின் பிரமதேவரின் படைப்புத் தொழில் தொடர்ந்து நடைபெறாமல் தடைப்பட்டது. அப்போது அவர் தாம் இனி என்ன செய்யலாம் என்று நினைத்து கவலையடைந்து சனகர் முதலிய நான்கு புத்திரர்களுடன் விஷ்ணுமூர்த்தியை அடைந்து அவரை வாழ்த்தி வணங்கி தமக்கு இப்போதுண்டாகிய துன்பத்தைக் கூறி இதனை தீர்த்துவைக்கும்படி வேண்டினர். அப்போது விஷ்ணு பிரமதேவரைப் பார்த்து இத் துன்பம் எம்மால் நிறைவேறமாட்டாது. இது சிவபிரானால்தான் முற்றுப்பெறும் என்று கூறி திருமால் இவர்களுடன் திருக்கைலாசமலைக்குச் சென்று ஆலயத்துக்குள் போய் சிவபிரானை வாழ்த்தி வணங்கி சிவனைப் பார்த்து சிவபிரானே பிரமதேவர் படைப்புத் தொழிலைச் செய்ய ஆரம்பித்து சனகர் முதலிய நான்கு முனிவர்களையும் படைத்தார். இதன்பின் அவருக்கு தொடர்ந்து படைக்கும் தொழில் நிறைவேறவில்லை. இதனால் அவரும் யானும் கவலையுடன் இங்கு வந்துள்ளோம். ஆதலால் தாங்கள் இத் துன்பத்தை நீக்கி பிரமதேவர் தொடர்ந்து படைப்புத் தொழிலைச் செய்ய தாங்கள் இப்போது திருவருள் செய்யவேண்டுமென்று வேண்டினார். அப்போது சிவபிரான் தமக்குமுன்பாக நிற்கும் பிரமா விஷ்ணு, சனகர் முதலிய நான்கு முனிவர்களையும் அழித்து தான் மட்டும் தனித்திருந்து தமது இடது புயத்தைத் திரும்பிப் பார்த்தார். அப்போது உமாதேவி தோன்றினாள். சிவபிரான் தமது இடது பாகத்தில் இருக்கும்படி இருத்திவிட்டு அம்மையாரோடு அத்துவிதமாகக் கலந்து வீற்றிருந்து இறந்த பிரம்மா, விஷ்ணு, சனகர் முதலிய நான்கு முனிவர்களையும் உயிர்பெற்றெழும்படி செய்து விஷ்ணுவைப் பார்த்து விஷ்ணுவே நாம் இப்போது அருட்சக்தியாகிய உமாதேவியுடன் சேர்ந்தோம். இனி பிரமதேவருடைய படைப்புத் தொழில் நன்றாக நடைபெறும். இனி நீங்கள் உங்கள் இருப்பிடங்களுக்குச் செல்லலாம் என்று கூற, இவ்வார்த்தையைக் கேட்ட இவர்கள் பெரிதும் மகிழ்ச்சியடைந்து சிவபிரானையும் உமாதேவியாரையும் வாழ்த்தி வணங்கி தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்றிருக்கும்போது பிரமதேவர் படைப்புத் தொழிலைச் செய்ய ஆரம்பித்தார். அது தொடர்ந்து நன்றாக நடைபெற்றது.

இப்போது சிவபிரான் சக்தியோடு கலந்து வீற்றிருப்பதால் ஆண் பெண் ஆகிய இருவரும் ஆசையோடு சேர்ந்து இன்பம் அனுபவிக்க ஆன்மாக்கள் மேலும் மேலும் பெருகியது. இந்த உமாதேவியே சிதம்பரத்தில் சிவகாமி அம்பாளாகவும், மதுரையிலே மீனாட்சி அம்பாளாகவும், காஞ்சியிலே காமாட்சி அம்பாளாகவும், திருக்கடவூரிலே அபிராமி அம்பாளாகவும், நயினாதீவிலே நாகபூஷணி அம்பாளாகவும், தெல்லிப்பழையில் துர்க்கை

*திட்டம் இல்லாமல் தொடங்கப்படும் நாள் மனநிறைவோடு முடிவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாளாகவும், பணிப்புலத்தில் அருள்மிகு முத்துமாரி அம்பாளாகவும் எழுந்தருளி ஆன்மாக்களுக்கு திருவருள் செய்கின்றாள். சிவனுடன் தொடர்புடைய தெய்வம் சக்தி சக்தி என்பது இறைவனது வல்லமை. இதை பின்வருமாறும் சொல்லுவர். ஆண்மை, ஆற்றல், வீரம், ஊக்கம் எனப் பல பொருள்படும்.

சக்தி என்பது சிவனில் கருணைக் குணம். சக்தி இன்றி சிவன் இல்லை. சிவமின்றி சக்தி இல்லை. இச் சக்தியே சகல அறிவுடை உயிரினங்களின் தோற்றத்துக்கும் சடப்பொருள் களின் தோற்றத்துக்கும் துணைக்காரணமாகவுள்ளதால் இதனால்தான் சக்தியை எல்லோரும் தாய்க்குத் தாய் என்று வணங்குவர். இதனை அபிராமி அந்தாதி பின்வருமாறு கூறுகிறது. "ஒன்றாய் அரும்பி பலவாய் விரிந்து இவ்வுலகெங்கு மாய் நின்றாள்" அனைத்தையும் நீங்கி நிற்பாள்.

இதனைக் காஞ்சி புராணம்

அண்ணலார் அருட்சக்தியும் சிவனும் ஆய
தன்மையின் அன்று தொட்டுலகம் பெண்மை
ஆண்மை என்றிருவகைப் புணப்பாற் பிறங்கும்.

சக்தியே மும்மூர்த்திகளுக்கும் மூத்தவள் என்னும் பொருளில் அவளை பெரியோர் திரிபுரா எனக் கூறுவர். இத்துடன் திரிபுர சுந்தரி எனவும் கூறுவர். சக்தி ஐந்தொழில் செய்யும்போது பிரமதேவருக்கு பிராமியாகவும், விஷ்ணுவிற்கு நாராயணியாகவும் உருத்திரனுக்கு உருத்திராணியாகவும், மகேஸ்வரனுக்கு மகேஸ்வரியாகவும், சதாசிவனுக்கு மனோன்மணியாகவுமிருந்து தொழிற்படுகின்றாள். இதனை அபிராமி அந்தாதி பின்வருமாறு கூறுகிறது.

நாயகி நான்முகி நாராயணி கைநளின பஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கி என்று
ஆயகியாதி உடையாள் சரணம் அரண் நமக்கே.

இப் பராசக்தியே இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தியாகவும் பின்வருமாறு தொழிற்படுபவள். இச்சாசக்தி என்பது ஆன்மாவின் மலத்தை நீக்கி சிவத்தைக் காட்டும் இரக்கமாகும். ஞானாசக்தி என்பது ஆன்மாவின் மலநீக்கத்துக்கும் முத்திக்குமுரிய வழிமுறை களைக் கூறுவது. கிரியாசக்தி என்பது மேலே சொல்லப்பட்ட விதிமுறைகளை செய்யும் சத்தியாகும். இத்துடன் இப் பராசக்தியே நவராத்திரி காலத்தில் முதல் மூன்று நாட்களிலும் அன்பர்களுக்கு வீரத்தைக் கொடுப்பதால் துர்க்கை எனப் பெயர் பெறுகிறாள். அடுத்த மூன்று நாட்களும் செல்வத்தைக் கொடுப்பதால் இலக்குமி எனப் பெயர் பெறுகிறாள். அடுத்த மூன்று நாட்களும் கல்வியைக் கொடுப்பதால் சரஸ்வதி எனப் பெயர் பெறுகிறாள். புரட்டாதி மாதத்தில் அமாவாசையை அடுத்து வருகின்ற வளர்பிறை காலத்து வளர்கின்ற ஒன்பது நாட்களில் சக்தியை வழிபடுகின்றோம் இந்த ஒன்பது நாட்களிலும் இராப்பொழுதில் சிறப்பாக இவ்விழா நடைபெறுகின்ற காரணத்தால் ஒன்பது இரவுகள் என்பதை நவராத்திரி

*கடமையைச் செய்யாமல் நேரத்தை வீணடிப்பது உங்களுக்கு நீங்களே செய்யும் துரோகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நாம் சொல்லுகிறோம். இந்த நாட்களில் எங்களிடத்திலுள்ள அஞ்ஞான இருளைப் போக்கி ஞான ஒளியைத் தருபவளாக அன்னை பராசக்தி தொழிற்படுகிறாள் என்பதை எல்லோரும் அறிவர்.

தனம் தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வு அறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

மாணிக்கவாசகர் தாம் பாடிய திருவாசகத்தில் சக்தியை பின்வருமாறு பாடுகிறார். (திருவெம்பாவை பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை தன் பாதத் திறம் பாடி ஆடுஏல் ஓர் எம்பாவாய்.)

ஆன்மாவுக்கு இரு நிலைகள் உள்ளது. ஒன்று பெத்தநிலை. இரண்டாவது முத்தநிலை எனப்படும். சக்தி பெத்தநிலையில் ஆன்மாவின் வினைப்பயனின்படியே ஆணவ மலத்தைத் தொழிற்படுத்தி ஆன்மாவின் அறிவை மறைத்து நல்வினை தீவினைகளை ஆன்மாவை செய்வித்து நிக்கும்போது இச்சக்தி திரோதானசக்தி என்னும் பெயர் பெறுகிறது. இதனால் ஆன்மா இறந்து பிறந்து பிறவியாகிய கடலில் அழுந்தும். இப்படியாகிய காலத்தில் ஆன்மா செய்த தவத்தின் பயனாக மானிடப்பிறவியைப் பெற்று ஞான நூல்களை கற்று குருமூலம் கேட்டு சிந்தித்து தெளிவடையும்போது இருவினையொப்பு மலபரிபாகம் என்னும் பக்குவம் வரும். அப்போது இத் திரோதான சக்தி திருவருள் சக்தியாக மாறி இப்பக்குவமடைந்த ஆன்மாவுக்கு சிவத்தை ஞானக்கண்ணால் கண்டு வழிபடும்படி காட்டி முத்தியை கொடுக்கும் போது திருவருள் சக்தி என்று பெயர் பெறுகிறாள். இதனை திருமந்திரம் பின்வருமாறு கூறும்.

இருட்டறை மூலையில் இருந்த குமரி
குருட்டுக் கிழவனை கூடக் கருதி
குருட்டினை நீக்கி குணம் பல காட்டி
மருட்டி அவனை மணம் புரிந்தாளே.

அம்பிகையில் பக்தியுடையவரும் அவளின் திருவருளைப் பெற்றவரும் சிறந்த அனுபூதி செல்வருமான இவர் அபிராமி அம்பாளின் திருவருள் சிறப்புக்களைக் கொண்ட அபிராமி அந்தாதி என்னும் நூற்றுஒரு பாடல்களைப் பாடிய காரணத்தால் இவருக்கு அபிராமிப்பட்டர் என்னும் பெயர் உண்டாகியது என்று பெரியோர் சொல்வர். இவரின் இயற் பெயர் சுப்பிரமணியர் என்பதாகும். ஒருநாள் இவர் திருக்கடவூர் அபிராமி அம்பாளின் ஆலய வெளிமண்டபத்திலிருந்து அம்பிகையை தமது உள்ளமாகிய ஆலயத்தில் ஞானக் கண்ணால் பார்த்து தரிசித்து பித்துப்பிடித்தவர்போல இருந்தார். அப்போது தஞ்சை மன்னன் திருக்கடவூருக்கு வருகிறான். அம்பாளின் ஆலய மண்டபத்திலிருந்த அபிராமிப் பட்டரைப் பார்த்து ஐயா இன்று என்ன திதி என்று கேட்கிறான். அப்போது சுப்பிரமணிய ஐயா அபிராமியின் ஞான ஒளிப்பிரகாசத்தைப் பார்த்து கண்ணை விழித்து நின்றார். அப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு பூரணை நிலவுதான் தெரிந்தது. அரசனே இன்று பூரணை என்று கூறினார். இவ் வார்த்தையைக் கேட்ட தஞ்சை மன்னனனும் அம்பிகை அடியார்களும் அவர் சொன்னதை நம்பாமல் இவருக்குப் பித்துப்பிடித்துவிட்டது போலும் என்று கூறி அவ்விடத்தைவிட்டு அகன்று விட்டனர். அப்போது அம்பாளின் திருவருளால்தான் பூரணையென்று கூறியது தவறு என்று நினைத்து வருந்தினார்.

எல்லாம் அம்பிகையின் திருவருள் "நானோ இதற்கு நாயகம் நன்றே வரிகினும் தீதே விளைகினும் யான் அறிவது ஒன்றேயுமில்லை" என்று உணர்ந்தார். இதன்பின்தான் அம்பிகையைப் பாடவேண்டுமென்று விரும்பி முதலில் விநாயகப்பெருமானை வணங்கி காப்புச் செய்யுள் பாடினார். இதனைத் தொடர்ந்து தனக்கு அம்பிகையே துணையானவள் என்று பாடத்தொடங்கி எழுபத்தொன்பதாவது பாடல் பாடத்தொடங்கிய நேரத்தில்

விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு வேதஞ்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ்வழி கிடக்க
பழிக்கே சுழன்று வெம் பாவங்களே செய்து பாழ் நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்னைக் கூட்டினியே.

அம்பாள் தமது திருத்தோட்டை கழற்றி எறிந்தாள். அது அப்போது ஆகாயத்தில் சென்று பூரண சந்திரனாக காட்சி கொடுத்தது. அமாவாசை அன்றே பூரணை நிலவுகண்டு எல்லோரும் திகைக்கிறார்கள். அபிராமிப்பட்டருக்கு முன்பாக வந்து மன்னிப்புக்கேட்டு அவரை வாழ்த்தி வணங்குகிறார்கள். இதன்பின் அபிராமிப்பட்டர் அபிராமி அந்தாதி நூற்றொரு பாடல்களையும் பாடிமுடித்தபின், மறுநாள் மன்னன் அபிராமிப்பட்டரின் வீட்டுக்குப்போய் அவரை வாழ்த்தி வணங்கி சுவாமி நீங்கள் பெரியவர் நேற்று நான் உங்களைப் புறக்கணித்துச் சென்றதை மன்னித்துக்கொள்ள வேண்டுமென்றுகூறி அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கி எழும்பிநின்று இன்று தொடக்கம் உங்கள் பெயர் அபிராமிப்பட்டர் என்று அடியார்கள் எல்லோரும் சொல்வார்களாக என்று கூறி எல்லாம் அவள் செயல் என்று கூறினார். இதன் பின் மன்னன் அபிராமிப்பட்டருக்கு சில நெல்லு விளையும் நிலங்களையும் அன்பளிப்புச் செய்தார். இதன்பின் அபிராமிப்பட்டர் அபிராமி அம்பாள்மீது பாடிய அபிராமி அந்தாதியோடு அபிராமிப் பதிகம் என்றபெயருடன் வேறு நூல்களையும் ஆக்கினார் என்பதை சைவப் பெரியார்கள்மூலம் நாம் அறியக் கூடியதாகவுள்ளது.

---

## வெற்றியின் ரகசியம்

*மான அவமானங்கள், ஏமாற்றங்கள், தோல்விகள், நிலைகுலைந்து போகச் செய்யும் காலச் சூழ்நிலைகள், காரியத்தில் நஸ்டங்கள், வஞ்சக சூழ்ச்சிகள், எதிர்ப்புகள், உறவினர்-நண்பர்களின் சூதுகள், அன்பின் இழப்புக்கள் இவையெல்லாம் மானிட வாழ்க்கையின் அன்றாட நிகழ்வுகள்.*

*இதுபோன்ற போராட்டங்களையெல்லாம் மன உறுதியுடனும், துணிச்சலுடனும் எதிர்கொள்கின்ற மானிடன் எவனோ அவனே மிகச் சிறந்த பராக்கிரமம் பொருந்திய வெற்றியாளனாக பரிணமிக்கின்றான்.*

**நல்லதே நடக்கும் என்று சொல்லாமல் நல்லதே நடக்கிறது என்று சொல்லுங்கள்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



பண்டாரவளை - கொஸ்லந்த பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ கணேசா தமிழ் மகா வித்தியாலயத்திற்கு 150,000 ரூபா பெறுமதியான கருங்கல்லில் வடிவமைக்கப்பட்ட விநாயகர், எலி விக்கிரகங்கள் வழங்கப்பட்டது.

பதுளை - வெலிமடை, வோர்விக் பகுதியில் அமைந்துள்ள சரஸ்வதி தமிழ் வித்தியாலத்தில் கல்வி கற்கின்ற 160 மாணவர்களுக்கு 150,000 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களும், பாடசாலையின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்காக 100,000 ரூபா நிதியும் வழங்கப்பட்டன.




நீங்கள் எந்த அளவிற்கு தன்னம்பிக்கையுடன் இருக்கிறீர்களோ அந்த அளவிற்கு உயரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஞானச்சுடர் மாசி மாத சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்கள்



மணிக்கணக்கில் உபதேசம் செய்வதைவிட ஒரு கணப்பொழுதாயினும் உதவி செய்வதுமேல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஞானச்சுடர் மாசி மாத சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்களும்,
வாசகர் போட்டியில் வெற்றியீட்டிய வாசகர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டபோது...





எது உன்னை அச்சம்கொள்ளச் செய்கிறதோ அதை அஞ்சாமல் எதிர்த்து நில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞானச்சுடர் வாசகர் போட்டியில் வெற்றியீட்டிய வாசகர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டபோது



வெற்றி என்பது பெற்றுக்கொள்வதற்கு... தோல்வி என்பது கற்றுக்கொள்வதற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக 240,000 ரூபா பெறுமதியான நிழற்பிரதி இயந்திரம் வழங்கப்பட்டது.






இந்துக் கற்கைகள் பீடம் யாழ் பல்கலைக்கழகத்தின் கோரிக்கைக்கு அமைவாக மூன்றாவது சர்வதேச இந்து மாநாட்டிற்கான நிதியாக 100,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

*மனம் தளராமல் இடைவிடாது முயற்சி செய்பவர் விதியையும் புறமுதுகு காட்டக் காண்பர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







01) யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக பார்வையற்ற இரண்டு குடும்பங்களின் வீடுகளுக்கு புதிய மின் இணைப்புக்கான செலவாக 130,000 ரூபா நிதி விழிப்புலனற்ற சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினரிடம் கையளிக்கப்பட்டது.

02) கோப்பாய் தெற்கு, ஞான வைரவர் ஆலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக கட்டிட கட்டுமானப் பணிக்காக 75,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

03) சங்கானை பிரதேச வைத்தியசாலையின் கோரிக்கைக்கு அமைவாக நரம்பியல் பிரிவுக்குரிய பக்கவாத நோயாளிகளுக்கான சிகிச்சை இயன் மருத்துவருக்கு வேதனம் வழங்குவதற்கு 70,000 ரூபா நிதி வழங்கப்பட்டது. இந்நிதியானது ஆறு மாத காலத்திற்கு தொடர்ச்சியாக வழங்கப்படவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதி முருகா போற்றி

– திரு முருகவே பரமநாதன் அவர்கள் –

சந்நிதி வேலவா போற்றி
சங்கரி பாலா போற்றி
கொன்னுனி வேலா போற்றி
கொள்கையின் சீலா போற்றி
பன்நிதி அளிப்பாய் போற்றி
பாதகம் தவிர்ப்பாய் போற்றி
என்நிதி ஆனாய் போற்றி
ஏவரும் துதிப்பாய் போற்றி
முருகனே முதல்வா போற்றி
மூவிரு முகத்தாய் போற்றி
ஒருவனே ஆனாய் போற்றி
ஓங்கார ரூபனே போற்றி
பெருநிதி அளிப்பாய் போற்றி
பேருல காள்வாய் போற்றி
இருநிதிக் கிழவா போற்றி
ஈராறு கரத்தாய் போற்றி.
மயில்மிசை வருவாய் போற்றி
மாயனின் மருகா போற்றி
அயில்தனை உடையாய் போற்றி
ஆறுபடை உறைவாய் போற்றி
ஒயிலெனத் திரிவாய் போற்றி
ஓமெனும் பொருளாய் போற்றி
வெயிலினில் நிழலே போற்றி
வேற்படை வீரனே போற்றி
ஏகனே அநேகனே போற்றி
ஏரகத் துறைவாய் போற்றி
மேகனின் மருகனே போற்றி
மேதகு முருகனே போற்றி
வாகன மயிலாய் போற்றி
வழித்துணை ஆவாய் போற்றி
வேகனே வேந்தனே போற்றி
வேதனை ஒழிப்பாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத வாராந்த நிகழ்வுகள்

**04.04.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு:- "குருபூசையின் மகத்துவம்"

வழங்குபவர் :- திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள்

[ஆசிரியர் – வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி]

---

**11.04.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

**18.04.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு:- "மகாபாரதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு இரா. செல்வவடிவேல் அவர்கள்

[ஆசிரியர்]

---

**25.04.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் சித்திரை மாத வெளியீடு

வெளியீட்டுரை:- திரு க. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள்

[இளைப்பாறிய கிராம சேவகர்]

**328 ஆவது மலர்**

மதிப்பீட்டுரை:- திரு சோ. தேவராஜா அவர்கள்

[சிரேஷ்ட சட்டத்தரணியும், பதில் நீதிவானும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org